மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

P.V. ஆனந்தன்

மலர் 4 | 1 - 4 - 56 | இதழ் 2

அறிவியல் ஆராய்ச்சியில் உயிர்நீத்த அம்மையார்

ஜூலியோ - கியூரி

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

அண்ணாவைப்பற்றி அழகிரி

அறிஞர் அண்ணா அவர்கள் பொதுத்தொண்டில் இறங்கி இயக்கப்பணி செய்ய தொடங்குவதற்கு முன்னால், இயக்கத்தில் ஈடும் எடுப்பும் அற்ற சிறந்த சொற்பொழிவாளராய், இயக்கத்தவராலும் பொதுமக்களாலும் பெரிதும் விரும்பப்படும் பேச்சில் வல்லவராய்ப், புகழும் பெருமையும் பெற்றவராய், தாமே சிந்தித்துச் சொல்லும் அஞ்சா நெஞ்சினராய் விளங்கியவர் காலஞ்சென்ற பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி ஆவார்கள்.

இப்பொழுது அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சைக்கேட்க மக்கள் திரண்டு ஓடுவதைப்போல், அந்த நாட்களில் அஞ்சாநெஞ்சர் அழகிரிசாமி அவர்களின் பேச்சைக் கேட்க மக்கள் விழுந்தோடுவார்கள்.

இயக்க வளர்ச்சியிலே அக்கரையும், கொள்கையைப் பரப்புவதிலே ஆர்வமும் கொண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் பின்னைநாட்களில் எப்படிப் பெரியார் இராமசாமி அவர்களுக்கு உறுதுணையாக விளங்கினார்களோ, அப்படியே அழகிரிசாமி அவர்கள் முன்னை நாட்களில் பெரியார் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் இயக்கப்பணியில் இறங்கி வேலைசெய்யத் தொடங்கிய காலை, பெரியார் இராமசாமி அவர்களைப்போலவே தோழர் அழகிரிசாமி அவர்களும் அண்ணாவைப் பெரிதும் வரவேற்றுப் பாராட்டி மகிழ்ந்தார்கள். நாளடைவில் அண்ணா அவர்களைச் சுற்றிப் பெருமையும் புகழும் பெருமளவுக்கு வட்டமிடத் தொடங்கவே, அந்த நிலை பெரியார் அவர்களுக்கு எப்படி உள்ளூர மனப்புழுக்கத்தைத் தந்ததோ, அப்படியே தோழர் அழகிரிசாமி அவர்களுக்கும் உள்ளூர மனப்புழுக்கத்தைத் தந்தது. அந்த மனப்புழுக்கம் அண்ணாவை வெறுக்கும்படி, அவரைச் செய்துவிட்டது என்னலாம். கடலூர் மாநாட்டிலும், தூத்துக்குடி மாநாட்டிலும் அண்ணாவின்மீது தாம்கொண்ட பகைமையுணர்ச்சியை வெளிப்படையாகவே காட்டிக்கொண்டார். ஆனால் அண்ணா அவர்கள் தம் இயல்புக்கு ஏற்றபடி அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமலே இருந்துவந்தார்கள்.

அழகிரிசாமி அவர்கள் மரணப்படுக்கையில் கிடக்கும்போதுதான், அண்ணாவின் அரிய பண்பாடுகளையும். அருமை பெருமைகளையும் உணர்ந்தார்; அவற்றை வாய்விட்டே சொல்லிவிட்டார். அதுவரையில் பெரியாரை உற்ற நண்பராகவும், அண்ணாவைப் படுஎதிரியாகவும் கருதிவந்த அழகிரிசாமி அவர்கள், மரணப்படுக்கையில் கிடக்கும்போதுதான், தம் கருத்தை மாற்றிக்கொண்டார்.

அழகிரிசாமி அவர்கள் நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் கிடக்கும்போது, அவரால் அதுகாறும் உற்ற நண்பராகக்கருதப்பட்ட பெரியார் அவர்கள் எவ்வித உதவியும் செய்ய முன்வராமலிருக்கும் நிலையில், அழகிரியால் படுஎதிரியாகக் கருதப்பட்ட அண்ணா அவர்கள் தான் உதவிசெய்ய ஓடோடியும் வந்தார்கள். சென்னையில் அண்ணா அவர்கள், தாம் நாடகம் ஆடியதன்மூலம் திரட்டிவைத்திருந்த ரூபாய் எண்ணூற்றுக்கு மேற்பட்ட தொகையை, அழகிரி அவர்களுக்குக் கொடுத்து உதவியதோடு, தம்மைக் கூட்டத்திற்குக் கூப்பிடுவோர் நூறு ரூபாயைத் தோழர் அழகிரிசாமி அவர்களுக்கு அனுப்பிவிட்டுத் தம்மைக் கூட்டத்திற்குக் கூப்பிட வேண்டும் என்று நிபந்தனையும் விதித்திருந்தார்கள். அந்த வகையில் ரூபாய் அறுநூற்றுக்கு மேல் அழகிரியிடம் போய்ச்சேர்ந்தது. நோய்வாய்ப்பட்டு வறுமையில் கிடந்து உழன்று கொண்டிருந்த அழகிரி அவர்களுக்கு, அண்ணாவின் உதவி பெருத்த ஆறுதல் அளித்தது.

தோழர் அழகிரிசாமி அவர்கள் இறந்துபடுவதற்குச் சிலநாட்களுக்கு முன்பு தோழர் நெடுஞ்செழியன் அழகிரிசாமியைக் காண தஞ்சை சென்றிருந்தார். அதுபோது தோழர் அழகிரிசாமி, மரணப்படுக்கையில் கிடந்து, கண்கலங்கியவண்ணம் அவரிடம் கூறிய சொற்கள் : **"ஆம், தம்பீ ! நான் யாரை நண்பனாகக் கருதவேண்டுமோ, அவனை என் எதிரியாகக் கருதினேன் ; யாரை என் எதிரியாகக் கருதவேண்டுமோ அவரை நண்பராகக் கருதினேன் ! ஆபத்துக்காலத்தில்தானே நண்பனின் தன்மையை அறியமுடியும் என்கிறார்கள் ! அத்தகைய நண்பன் அண்ணாதுரை உருவத்தில் எனக்குத் தோன்றுவான் என்பதை இதுவரையில் நான் உணராமல் இருந்துவிட்டேன் ! அது என் தவறுதான் ! நான் குடித்தேன், ஆகவே கெட்டுப் போய்விட்டேன் என்கிறாராம் பெரியார் ! எனது பலக்குறைவின் நிழலில் நின்றுகொண்டு தம் மகிழ்ச்சியைக் கட்டி மகிழ்கிறார் கிழவர் ! மகிழட்டும் ! அண்ணாதுரையின்மீதுதான் எனக்கு என்ன கோபம்? அப்படி ஒன்றுமில்லை! அவன் இயக்கத்தைவிட்டு ஒதுங்கிச் செல்கிறானே என்பதுதான் எனக்கு வருத்தம் ! அண்ணாதுரை கண்டெடுக்க முடியாத கருத்துக் கருவூலத்தின் பெட்டகம் ! அவனுக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன் ! என் இதயத்தில் பொங்கிவழியும் அன்பைத்தான் நான் தரமுடியும் ! அதை நான் காணிக்கையாகத் தந்ததாக நீ அவனைக் காணும்போது சொல்லு !"** என்பனவையாகும்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் பண்பு அறிஞர் அண்ணா அவர்களிடம் எந்த அளவுக்கு மிளிருகிறது என்பதை மேற்கண்டவற்றிலிருந்து உணரலாம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1 - 4 - 56 ஞாயிற்றுக்கிழமை

தயாராகுக!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு மே 17, 18, 19, 20 ஆகிய நாட்களில் திருச்சியில் நடைபெற இருக்கிறது.

இந்த மாநாடு திராவிடத்தின் வரலாற்றிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றிலும் முக்கியமான ஒரு கட்டத்தை ஏற்படுத்தக்கூடிய சிறப்பியல்புகள் அமைந்த ஒரு மாநாடகத் திகழும் என்று, கழகத்தோழர்களும், கழகத்திடத்துப் பற்றுக்கொண்டோரும் மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

வருங்காலத்தில் கழகம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை வகுத்துக் காட்டும் முறையில், திராவிடத்தின் அரசியல்- பொருளாதாரம்- சமுதாயம் பற்றிய பல்வேறு திட்டங்கள் இந்த மாநிலமாநாட்டிலே தீட்டப் பெறும். சிலவகைகளிலே இந்தமாநாடு ஒரு சிறந்த திருப்புமையமாகத் திகழக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டின் வரவேற்புக்குழுவினர் மாநாட்டை எழிலோடும் ஏற்றத்தோடும், பொலிவோடும் புகழோடும், வலிவோடும் வளத்தோடும் நடத்துவதற்கான முறையில் ஏற்பாடுகளைச் செய்யமுற்பட்டு விட்டனர். மாநாட்டின் வரவேற்புக்குழுவினர் தயாராகிவிட்டனர். மாநாட்டிற்குத் திராவிடம் எங்கும் இருந்தும், இலங்கை - மலேயா - சிங்கப்பூர் - பர்மா- போன்ற வெளிநாடுகளிலிருந்தும் வர இருக்கும் கழகத்தோழர்களும், கழகப்பற்றுடையோர்களும் இப்பொழுதிருந்தே தங்களைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மாநாட்டை சீரும்சிறப்பும் பொருந்த வெற்றிகரமாக நடத்துவதற்கான உருவான கருத்துரைகளை ஆங்காங்குள்ள கழகத்தோழர்கள் எடுத்தியம்புவார்களேயானால், அவற்றை வரவேற்புக் குழுவினர் உள்ளன்போடும், உவகையோடும் பெரிதும் வரவேற்பார்கள்.

கழகப் பற்றுடைய பொறியியல் வல்லுநர்கள் மாநாட்டின் பந்தலமைப்பு - முகப்புஅமைப்பு- மேடைஅமைப்பு - உணவு விடுதிகள் அமைப்பு- தங்குமிடங்கள் அமைப்பு - கடைகள் அமைப்பு இன்னபிற அமைப்புகளெல்லாம் எப்படி அமைந்திருந்தால் அழகும் வசதியும் ஏற்படும் என்பதைத் தெரிவிப்பது நலம் பயக்கும்.

கண்காட்சியில் வைப்பதற்கான வியப்புக்குரிய பொருள்களை வைத்திருக்கும் அல்லது செய்துதரும் பொதுமக்களும், மாணவர்களும் தங்கள் தங்கள் பொருள்களைக் கொண்டு வந்து காட்சியில் வைத்துப் பின்னர் எடுத்துச் செல்வது பாராட்டுவதற்குரியதான செயலாக இருக்கும்.

மாநாட்டிற்கான விளம்பரச் சுவரொட்டிகளையும், துண்டு அறிக்கைகளையும் தலைமைக் கழகத்திடமிருந்தாவது அல்லது வரவேற்புக் குழுவினரிடமிருந்தாவது பெற்று ஆங்காங்குள்ள நகரங்கள்- சிற்றூர்கள்- பேரூர்கள்- பட்டிகள் ஆகிய எல்லாஇடங்களிலும் மாநாட்டினைப் பற்றி விளம்பரப்படுத்த கழகத்தோழர்கள் முயற்சி எடுக்கவேண்டும். ஆங்காங்கு இப்பொழுதிருந்தே சைகிள்படைகள் கிளம்பி நாளொன்று ஒருசிலஊர்கள்வீதம், குழாய் மூலம் மாநாட்டினைப்பற்றி விளம்பரம்செய்ய முற்படவேண்டும். மாநாட்டிற்கு வரும்போது சைகிள் படைகள் ஆங்காங்கிருந்து கிளம்பி, வரும்வழியிலுள்ள சைகிள் படைகளையும் அழைத்துக் கொண்டு திருச்சிக்கு வந்துசேர இப்போதிருந்தே கழகத்தோழர்கள் திட்டங்களை தீட்ட முயலவேண்டும்.

ஒவ்வொரு கிளைக்கழகமும் மாநாட்டு ஊர்வலத்தில் ஏந்திச்செல்வதற்கான கொடியை இப்பொழுதே தயாரிக்கவும், மாநாட்டிற்கு வருவோரின் பட்டியலைத் தயாரிக்கவும் முனைய வேண்டும்.

பலமாவட்டங்களிலிருந்தும், குறிப்பாகத் திருச்சி தஞ்சை மாவட்டங்களிலிருந்தும், ஆயிரக்கணக்கில் மாட்டுவண்டிகள் கட்டிக் கொண்டு, பலரையும் அழைத்துக் கொண்டு, சாரைசாரையாக மாநாட்டிற்கு வந்துசேர ஆங்காங்குள்ள கழகத்தோழர்கள் எல்லாவித முயற்சிகளையும் எடுக்கவேண்டும்.

சுருங்கக்கூறினால் திராவிட முன்னேற்றக் கழக மாநிலமாநாடு, திராவிடத்தின் நல் வாழ்விலே அக்கறை கொண்ட ஏழை எளியவர்- நடுத்தர வகுப்பினர் - உழவர் பெருமக்கள்- பட்டாளிகள் - தொழிலாளர்கள் ஆகியோரின் மாநாடாகும். எனவே அத்தகையோர் அனைவரும், திருச்சிக்குத் திரண்டுவர, இப்பொழுதே தயாராகுக!

நீக்கமற நிறைந்த நீர்

"மனிதனின் உடல் எதனுல் செய்யப்பட்டது?" என்ற வினுவிற்கு, ஒருவரியில் விடையிறுக்க வேண்டுமானுல், "அது நீரால் செய்யப்பட்டது!" என்றுதான் சொல்லவேண்டும் என்று அறிஞர்கள் கூறுகிருர்கள். அதற்குக் காரணம், உடம்பிலுள்ள நீரின் எடை மட்டும், உடம்பின் மொத்த எடையில் ஏறத்தாழ முக்கால் அளவு இருக்கும் என்று செப்புகின்ருர்கள்.

நாம் உட்கொள்ளும் உணவை ஆராய்ந்து பார்த்தால்கூட, அவற்றில் சோற்றுப்பற்றின் அளவைவிட நீரின் அளவே மிகவாக இருக்கக் காணலாம். நாம் தின்னும் காய்கறிகளிலும், பழங்களிலும் நீர்தான் ஏராளமாக இருக்கும். தக்காளியில் 100-க்கு 94 பங்கும், முட்டைக்கோசில் 100-க்கு 93 பங்கும், உருளைக்கிழங்கில் 78 பங்கும், புடலங்காயில் 96 பங்கும், ஆப்பிளில் 80 பங்கும் தண்ணீர் சேர்ந்திருக்கின்றது. பாலிலும், மீனிலும் முக்கால் பங்கு நீர் நிறைந்திருக்கிறது. ஆடுமாடு ஆகியவற்றின் இறைச்சியில் ஏறத்தாழ 100-க்கு 70 பங்கு தண்ணீரேயாகும். கோழி இறைச்சியிலும், கோழி முட்டையிலும் 100-க்கு 75 பங்கு நீர கலந்திருக்கிறது. நெய்யிலும், வெண்ணெய்யிலும்கூட நீரின் சேர்ப்பு மிகவானதேயாகும்.

நாம் நமக்குத் தேவையான நீரைப்பெற மழையை எதிர்பார்த்திருக்கிறேம். மழையினைப் பொழியும் முகில்கள் கடலிலிருந்து கிளம்புகின்றன. கடல்நீர் இடத்திற்கு இடம் தன்மையில் வேறுபட்டு நிற்பதால், பல்வேறு கடல்களிலிருந்து கிளம்பும் முகில்கள், இடத்திற்கு இடம் தன்மையில் சிறிது வேறுபட்டனவான மழைகளை ஆங்காங்கு பொழிவிக்கின்றன. கடலோரங்களிலுள்ள நகரங்களில் பெய்யும் மழை அமோனியா சத்தையும், கடலுப்புக்களின் சத்தையும் மிகவாகக்கொண்டிருக்கும். நகரங்களில் நம்மை வந்தடையும் அந்த மழைநீர் மிகவான அழுக்குகள் நிறைந்ததாகவும் இருக்கும்.

உலகப்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதி நீரால் நிரம்பப்பெற்றதாகும். பலகோடிக் கணக்காண ஆண்டுகளுக்கு முன்னுல், இன்னும் மிகவான பரப்பு நீரால் மூழ்கிக்கிடந்தது. திங்களில் அறவே நீர் இல்லை என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகிருர்கள். ஆகையால்தான் அங்கு உயிரினம் எதுவும் இல்லை—இருக்கமுடியாது என்று அறுதியிடப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் நாள் ஒன்றுக்கு 120 அவுன்சு நீர் தேவைப்படுகிறது. அவ்வளவு நீரைக் கட்டாயம் உட்கொண்டால்தான் உடல் நலமாக இருக்க வழி ஏற்படும்.

நகரங்கள், சிற்றூர்கள், பேரூர்கள் ஆகியவற்றின் வரலாறுகளைத் துருவிப்பார்த்தால், அவையெல்லாம் நீர்நிலைகளை ஒட்டியே வளர்ந்தோங்கிவந்தனவாக இருக்கும். இற்றைக் காலத்தில் வளர்ந்துவரும் பட்டு, பருத்தி, கம்பளி, தோல், சாயம், வண்ணம், கயிறு போன்ற பல்வேறு தொழிற்சாலைகள் அந்தந்த பொருளுக்கேற்றபடி உரமும் உறுதியும், வலிவும் பொலிவும் தரக்கூடிய நீர்நிலைகள் உள்ள இடங்களில்தான் நிறுவப்படுகின்றன.

மக்கள் குளிப்பதற்குப் பெரும்பாலும் நீரையே பயன்படுத்தி வருகின்றனர் என்ருலும், ஒருசில காலங்களில், ஒருசில இடங்களில், ஒருசிலர் பாலையும், தேனையும்கூடப் பயன்படுத்தி வந்தனா—வருகின்றனர். நீரில் நறுமணம் வீசும் வண்ணமலர்களையும், வண்ணப்பொடிகளையும் தூவி, இன்சுவைகளைக் கலந்து நீராடும் பழக்கம் பண்டைத்தமிழகம்—அரேபியம்—எகுபதியம் — கிரேக்கம் — உரோமம் ஆகிய நாடுகளில் சிறந்து விளங்கிற்று. மிகஆடம்பரமான முறையில் வெந்நீராடும் பழக்கம் பண்டை உரோமத்தில் இருந்து வந்தது.

இங்கிலாந்தில் பல பகுதிகள் கடல் மட்டத்திற்குக் கீழே இருப்பதால், தண்ணீருக்காக மிக ஆழமாக வெட்ட வேண்டிய இன்றியமையாமை ஏற்படுவதில்லை. அதற்கு இலண்டன் மாநகரே சிறந்த எடுத்துக்காட்டாகும். இலண்டன் மாநகரில் பெரும்பாலான உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், துணிவெளுக்கும் விடுதிகள் ஆகியவை, தங்கள் தங்கள் இடங்களில், ஓயாமல் நீர் பொழிந்து கொண்டிருக்கும் நீரூற்றுக்களைத் தோண்டி வைத்துக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாக் கண்டங்களிலும் நீரூற்றுக்கள் ஏராளம் உண்டு. திராவிடத்தில் தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த தென்ஞற்காடு

ஜூலியோ - கியூரி

நோபல் பரிசு பெற்றவரும், உலக விஞ்ஞான மேதைகளில் தலைசிறந்தவர்களில் ஒருவராகவும் விளங்கிய ஐரேன் ஜோலியோ—கியூரி சென்ற மார்ச் 17-ந் தேதி மறைந்தார். இச் செய்தி விஞ்ஞானப் பகுதியினரை மட்டுமின்றி, உலகை அமைதிகாண விழைந்தவர்களிடமும் நீங்காத் துயரை உண்டாக்கியிருக்கும். ஜோலியோ—கியூரி அம்மையார் விஞ்ஞானம் மட்டுமின்றி, உலகின் அமைதி குறித்தும் மிகவும் பாடுபட்டு வந்தார்கள். விஞ்ஞான விளைவுகள் உலகை அழிக்கவல்ல, உலகைச் செழிப்பிக்க, மனித வாழ்வை இன்பமாக ஆக்குவதற்காக என்ற கொள்கையுடன் அவர்கள் உழைத்தார்கள்.

ரேடியக்கதிர் வீச்சின் தன்மையைக் கண்டறிந்து, ரேடியம் என்ற மூலப்பொருளை முதலில் பிரித்துக் காட்டியவர்கள் பியர் கியூரியும், மேரி கியூரியும் ஆவார்கள். அவர்களுடைய முதல் மகளே ஐரேன்.

மேரி கியூரி எழுதிவைத்துள்ள குறிப்புகளைப் பார்த்தால், மகளை எவ்வளவு கவலையுடன், செல்வத்துடன் வளர்த்தார்கள் என்பது தெரியும். ரேடியம் என்ற மூலப்பொருளைக் கண்டுபிடிப்பதற்குமுன், பொலோனியம் என்ற மூலப்பொருளைதான் முதலில் கியூரி தம்பதிகள் கண்டுபிடித்தனர். 1898 ஜூலை மாதத்தில், பிரெஞ்சு விஞ்ஞான கழகத்தின் விஞ்ஞான ஏட்டில், கியூர் தம்பதிகள் பின்வரும் குறிப்பைத் தந்தார்கள்.

“பிச்—பிளான்த் என்ற கனிப்பொருளைப் பகுப்பதன்மூலம், இதுவரை கண்டுபிடிக்கப்படாத புதிய மூலப்பொருளைப் பிரிக்கலாம் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த மூலப்பொருள் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டால், அதற்கு பொலோனியம் என்ற பெயரிட நாங்கள் நிச்சயித்துள்ளோம்.”

விஞ்ஞான உலகிற்கு இது முக்கிய அறிவிப்பாகும். இது வெளிவந்த நான்கு நாட்களுக்குப்பிறகு, மேரி கியூரி தனது குறிப்பேட்டில் பின்வருமாறு எழுதிக்கொண்டார்.

“குழந்தை ஐரேன் கையை உயர்த்தி ‘நன்றி’ தெரிவிக்கிறாள், நன்றாகத் தவழ்கிறாள், தோட்டத்தில் விரிக்கப்பட்ட கம்பளத்தில் உருண்டு, புரண்டு, எழுந்து உட்கார்ந்து விடுகிறாள்!”

பியர்—மேரி கியூரி தம்பதிகள் நடத்திய ஆராய்ச்சி சூழ்நிலையிலேயே ஐரேன் கியூரியும் வளர்ந்து வந்தார்கள். 1898-ல் ஆரம்பித்து 1902 வரை நான்கு ஆண்டுகாலம் ரேடியத்தைப் பிரித்திடும் கடினமான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். ரேடியம் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டபொழுது, ஐரேன் கியூரிக்கு வயது ஐந்து நிரம்பவில்லை. ஐரேனுக்குத் தங்கையாக ஈவ் என்ற பெண்ணும் பிறந்தாள்.

கியூரி தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள் இருந்தன என்று கூறலாம். ஐரேன், ஈவ், ரேடியம்! மிகுந்த வேதனை, உழைப்பு, கடினத்துக்குப்பின் ரேடியத்தைத் தனியாகப், பிரித்தெடுத்து, முதல் தடவையாக அது உருவாகி ஒளிவிடுவதைப் பார்த்த பொழுது, கணவனும் மனைவியும் தொட்டிலில் உறங்கிடும் குழந்தையை பார்ப்பதுபோல பாசத்துடனும் நேசத்துடனும் பார்த்தார்களாம்.

மாவட்டத்தில் நெய்வேலியைச் சேர்ந்த பகுதிகளில் ஏராளமான நீரூற்றுக்கள் இருக்கின்றன.

குடிநீர் பிரச்சினை இன்னமும் உலகின் பலப் பகுதிகளில் தீர்க்கமுடியாத பிரச்சினையாகவே இருந்து வருகிறது. பெருமுயற்சிகள் எடுத்து நெடுந்தொலைவிலிருந்து குடிநீர் கொண்டுவந்து சேர்க்கும் பணிகளில் பெரும்பாலான நாடுகள் ஈடுபட்டிருக்கின்றன.

கடல் நீரைக் குடிநீராக எளிதில் மாற்றுவதற்கான முயற்சிகளில் அறிவியலறிஞர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அத்தகைய முயற்சிகள் எளிதில் வெற்றி பெற்றுவிட்டால், கடற்கரையை ஒட்டியுள்ள பல நகரங்களின் குடிநீர் பிரச்சினை எளிதில் தீர்ந்துவிடும்.

உயிரினங்கள் நீரின்றி உயிர்வாழா! உலகில் என்று நீரற்றுப்போகுமோ, அன்றே உயிரினமும் அற்றுப்போகும்!

விஞ்ஞான் சூழ்நிலையில், ஆராய்ச்சிகளின் மத்தியில் குழந்தை ஐரேன் வளர்ந்தாள். சிறுகச்சிறுக அவளுடைய மனமும் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டது. 1914—18 சண்டைகளில் நாட்டுப் படையினருக்கு உதவியாக போர்க்களங்களில் வேலை செய்தபின், 1918-ல் தன் தாயின் ஆராய்ச்சிகூடத்தில் சேர்ந்தார்கள்.

ஐரேன் கியூரியின் வாழ்க்கையும் அவளுடைய தாய் மேரி கியூரியின் வாழ்க்கையும் பெரும்பாலும் ஒத்திருந்தது என்று கூறலாம். ஓய்வு ஒழிவின்றி கடுமையான உழைப்பை இருவரும் ஏற்று, விஞ்ஞானத்திற்காகவே தங்கள் நேரமெல்லாம் செலவிட்டார்கள்.

அவர்களுடைய வாழ்க்கைத் துணைவர்களும் பிரபல விஞ்ஞானிகளாகவே அமைந்தனர். மேரி கியூரி, பியர்கியூரி இருவரும், ரேடியத்தைத் தனியாகப்பிரித்து, ரேடியக் கதிர்வீச்சு பற்றிய அறிவை உலகுக்களித்தனர். இருவருக்கும் சேர்ந்து 1903-ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஐரேன் ஜோலியோ—கியூரியும் அவருடைய கணவன் ப்ரெடரிக் ஜோலியோ—கியூரியும் சேர்ந்து, அணுசக்தி பற்றியும், செயற்கை முறையில் ஏற்படும் ரேடியக் கதிர்வீச்சு பற்றியும் ஆராய்ச்சி நடத்தி, புதிய உண்மைகளை உலகுக்கு அளித்தனர். அவர்களுடைய கண்டுபிடிப்புகளைப் பாராட்டி, 1935-ல் நோபல் பரிசு அவர்கள் இருவர்களுக்கும் சேர்த்து வழங்கப்பட்டது.

இதுவரை, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்காக இருபெண்கள் நோபல் பரிசு பெற்றுள்ளனர். ஒருவர் மேடம் கியூரி, அடுத்தது அவருடைய மகள் ஐரேன் ஜோலியோ—கியூரி!

நோபல் பரிசு கூட்டாக அளிக்கப்பட்டவர்களில் இதுவரை இரண்டுமுறை கணவன்—மனைவி சேர்ந்து பரிசுபெற்றனர். முதல் தடவை மேடம் கியூரியும் அவரது கணவன் பியர் கியூரியும். இரண்டாவது தடவை ஐரேன் ஜோலியோ—கியூரியும் அவரது கணவன் பிரெடரிக் ஜோலியோ—கியூரியும்!

கியூரி பரம்பரையில் அடுத்தடுத்து நோபல் பரிசு பெற்றவர்களாக, கணவன்—மனைவியர் இருந்திருக்கின்றனர். தாய் அடைந்த உன்னத பதவியை, மகளும் அடைந்தாள்! பதவி என்றால், பொருளாதார அரசியல் உலகுகளில் கிடைப்பதுபோல தாய்தந்தையரின் சொத்து, செல்வாக்கு மக்களைத் தூக்கிவிடுவதல்ல! தாய் மேற்கொண்ட உழைப்பைத் தானும் மேற்கொண்டு ஐரேன் ஜோலியோ—கியூரி அம்மையாரும் விஞ்ஞான மேதைகளின் வரிசையில் சேர்ந்தார்கள்.

கடைசியாக ஐரேன் ஜோலியோ—கியூரி அம்மையார் உயிர் நீத்ததுகூட, தாம் ஈடுபட்டிருந்த விஞ்ஞான ஆராய்ச்சியின் காரணமாக! அணுக்கதிர் வீச்சுகளில் அடிக்கடி தம்மை ஈடுபடுத்தியதன் விளைவாக உடல்நலங் குன்றி, இரத்தம் வலிவிழந்து, அம்மையார் உயிர்நீத்தார். விஞ்ஞான ஆராய்ச்சிக்காக தமது உடல் நலத்தையும், உயிரையும் பாராது, ஈடுபடும் மனப்பாங்கு கியூரி குடும்பத்தினரிடை இருந்து வந்திருக்கிறது. ரேடியக் கதிர் வீச்சு பற்றி 1900ல் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும் பொழுது மனித உடலில் ரேடியக்கதிர் வீச்சு என்னசெய்யும் என்ற கேள்வி டாக்டர்களிடை எழுந்தது. ரேடியத்தைப் பிரித்தெடுக்கும் முறையில் ஈடுபட்டிருந்த பியர் கியூரி உடனே எதையும் பொருட்படுத்தாமல், தமது கையை ரேடியக் கதிர்வீச்சின்முன் வைத்தாராம். இரண்டொரு நாட்களில், கதிர்வீச்சுப் பட்ட இடத்தில் புண் உண்டாவது கண்டு அந்த விஞ்ஞானி மகிழ்ந்தாராம்! தன் கையில் புண் உண்டான விதம், அதன் வலி, வளர்ச்சி இவற்றைப்பற்றிக் குறிப்பு எடுத்து, விஞ்ஞானக் கழகத்துக்கு அவர் அனுப்பினார்! ரேடியக் கதிர்வீச்சு, பிளவைபோன்ற நோய்களைக் குணப்படுத்தும் என்ற உண்மை பின்பு காணப்பட்டது. அத்தகைய பியர் கியூரியின் மகள் தான் ஐரேன் கியூரியும்! தந்தையைப் போலவே அவரும் உடல்நலத்தைப் பாராமல் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தாள். உண்மைகளைக் கண்டறிய, உலகம் வாழ, விஞ்ஞானிகள் தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் போராடியிருக்கிறார்கள். அந்த உத்தமர்கள் பட்டியலில் ஐரேன ஜோலியோ—கியூரியும் சேர்த்து போற்றப்படவேண்டும்.

விஞ்ஞானத்துறையில் மட்டுமன்றி, உலக அமைதிக்காகவும் ஐரேன் கியூரி அம்மையார் மிகவும் பாடுபட்டார்கள். உலக அமைதிக் குழுவில் அவரும் அவருடைய கணவனும் முன்னின்று பணியாற்றினார்கள்.

பிரெஞ்சு நாட்டில் மட்டுமல்லாமல், உலகு முழுவதும் போற்றப்படும் நிலையில், ஐரேன் ஜோலியோ-கியூரி அம்மையாரின் உழைப்பும் விஞ்ஞான அறிவும் இருந்தன. அந்த அறிவு, உழைப்பு, உலகு இன்பமாக வாழவேண்டுமென்று பாடுபட்ட உயர்ந்த உள்ளம், இன்று அமைதியடைந்துவிட்டது, மறைந்துவிட்டது! அந்த மறைவு உலகுக்குப் பெரும் இழப்பாகும்.

—

1963

வினாவும் விளக்கமும்

வினா : உருவ வழிபாட்டில் நம்பிக்கையற்ற தலைவரின் சீடர்கள் அத்தலைவரின் படத்தை மாட்டிவைத்துக் கொண்டு அதற்கு மாலையிட்டு மரியாதை செய்வது தகுமா? அத்தலைவரின் படத்தை ஒருவர் அவமதித்தால், அத்தலைவரின் கழகத்தினர்க்குக் கோபம் வராதா? படம் அத்தலைவரை நினைவூட்டுவது போலத்தானே பக்தர்களுக்குக் கடவுளுருவம் கடவுளை நினைவூட்டும் சின்னமாகக் கருதுகின்றனர். அப்படி இருக்க அதை மறுப்பதும், வெறுப்பதும் ஏன்?

[இது அருள்நெறித் திருக்கூட்டத்தாரின் 12 வது வினா]

விளக்கம் : பக்தன் கடவுள் உருவத்திற்குத் தாமே இயங்கும் எல்லாம்வல்ல அறிவும், ஆற்றலும் உண்டு என்று நம்பிதான் வழிபட்டுவருகிறான். ஆனால் பகுத்தறிவுவாதி தன் தலைவரின உருவத்திற்கு அறிவோ, ஆற்றலோ ஒரு சிறிதும் இல்லை என்ற எண்ணத்துடன் தான் அதனை அழகுபடுத்திப் பார்த்துமகிழ்ந்து வருகிறான்.

பக்தன், கடவுளுருவத்திற்குக் காண்டல், கேட்டல், உண்ணல், உயிர்த்தல், உற்றல் ஆகிய ஐம்புலனறிவும் உண்டு என்று நம்புகிறான். கடவுளுருவம், தன்னைப்பார்க்கிறது என்ற எண்ணத்தில் கீழே விழுந்து, எழுந்து, இறைஞ்சிநின்று, தலைகுட்டி, வாய்பொத்திக், கைகட்டி நிற்கிறான். அது தன் குறைகளையும், வேண்டுகோள்களையும் கேட்கிறது என்ற கருத்தில், மனதிலும், வாயினாலும் சொல்லிக் காட்டுகிறான். அது உண்ணுகிறது என்று கருதி, அதற்குப் பால், பழம், சர்க்கரைப் பொங்கல், வடை, தோசை, சுண்டல், கொழுக்கட்டை மற்றும் பலவகைத் தின்பண்டங்கள் ஆகிய எல்லாவற்றையும் அவன் படைகிறான். அது சூடஞ்சாம்பிராணிப்புகை, சந்தனம், அத்தர், சவ்வாது, மலர் ஆகியவற்றின் மணத்தை நுகர்கிறது என்று கருதி, அத்துணையையும் அதற்கு அவன் சார்த்துகிறான். அது உற்றறியும் உணர்ச்சி கொண்டது என்று எண்ணி, அதற்கு அவன் பட்டாடை கட்டி, அதனைப் பட்டு மெத்தையில் வைத்துச், சாமரம் வீசுகிறான். இந்த வகையில் பக்தன் கடவுளுருவத்தை வழிபடுகிறான். ஆனால் பகுத்தறிவுவாதி தன் தலைவரின் உருவத்திற்கு ஐம்புலனறிவு உண்டு என்றோ, தன்னிடமிருந்து வணக்கம், வாழ்த்துரை, சுண்டல், நறுமணம், சாமரவீச்சு ஆகியவற்றை எதிர்பார்க்கிறது என்றோ கருதுவதில்லை. அவன் தன் தலைவரின் படத்தை உயிரற்ற, உணர்ச்சியற்ற ஒரு பொருள் என்றுதான் கருதுகிறான். தனக்கு நினைவுபடுத்தும் ஒரு அறிகுறியாகத்தான் தன் தலைவரின் படத்தைப் பகுத்தறிவுவாதி கருதுகிறான். தலைவரின் படத்தை அவன் தலைவரைப் பற்றியும், தலைவரின் கருத்துக்கள்—கொள்கைகள்—குறிக்கோள்கள் ஆகியவற்றைப் பற்றியும் நினைவுபடுத்தும் ஒரு அறிகுறிப்பொருளாகக் கொள்கிறானே அல்லாமல், கேட்ட வரம் அளிக்கும் ஒரு வழிபடு பொருளாகக் கொள்வதில்லை. எதிரே நின்று பார்க்கும் தன் மனமும், தன்னைப்போன்ற பிறரின் மனமும் மகிழ வேண்டும் என்பதற்குத்தான் தலைவரின் படத்தையோ அல்லது உருவச்சிலையையோ மாலையால் அழகுபடுத்துதல், ஒளி விளக்குகளால் அழகுபடுத்துதல், திறந்து வைத்தல், ஊர்வலமாக எடுத்துச்செல்லுதல் ஆகிய அன்புச்செயல்களைப் பகுத்தறிவுவாதி மேற்கொள்ளுகிறானே ஒழிய, அவையெல்லாம் அந்தப்படத்திற்கோ அல்லது அந்தச் சிலைக்கோ தேவைப்படுகின்றன என்பதற்காக அல்ல.

கடவுளுருவத்தில் மாலையிட்டுப் பக்தன் வழிபடுவதற்கும் தலைவரின் உருவத்திற்கு மாலை போட்டு அழகுபடுத்திப் பகுத்தறிவுவாதி பார்த்து மகிழ்வதற்கும் உள்ள வேற்றுமையைச் சிறிதளவு அறிவுத்தெளிவுபெற்ற சிறுவனும்கூட உணர்ந்து கொள்ளக்கூடும். படத்திற்கு வழிபாடு முறையில் மரியாதை செய்யும் பழக்கம் பகுத்தறிவுவாதியிடம் இருப்பதில்லை. பகுத்தறிவுவாதி தலைவரின் படத்தை மதிப்பானே ஒழிய அதற்கு மரியாதை செய்து வணங்கி வழிபடமாட்டான். எனவே கடவுள் உருவவழிபாட்டில் நம்பிக்கையற்ற ஒரு தலைவரின் சீடர்கள் அத்தலைவரின் படத்தை மாட்டி வைத்துக்கொண்டு

அழகுக்காக அதற்கு மாலையிட்டு மதிப்பளிப்பது எவ்வகையிலும் தகும் என்க.

"தலைவரின் படத்தை ஒருவர் அவமதித்தால், அத்தலைவரின் கழகத்தினர்க்குக் கோபம் வராதா?" என்று திருக்கூட்டத்தார் வினவுகின்றனர். "உறுதியாக வரும்!" என்று தான் நாம் அழுத்தந்திருத்தமாக விடை கூறுகிறோம். ஏனெனில் தலைவரின் படத்தை அவமதிப்பதின் மூலம் தலைவரை—தலைவரின் கொள்கைகளை அந்த ஒருவர் அவமதிப்பதாகத்தான் கழகத்தினர் கருதுவார்கள்—கோபங்கொள்வார்கள். கோபம் கழகத்தினர்க்குத்தான் வருமே ஒழிய, தலைவரின் படத்திற்கு வராது என்றுதான் நாம் சொல்லுகிறோம். அதுபோல கடவுளுருவத்தை அவமதித்தால், கோபம் பக்தர்களுக்குத்தான் வருமே ஒழிய, கடவுளுருவத்துக்கு வராது என்று சொல்ல பக்தர்கள் தயாராக இருக்கிறார்களா என்றால், அதுதான் இல்லை! அவர்கள் கடவுளுருவத்திற்கே கோபம் வரும் என்கிறார்கள். பகுத்தறிவுவாதிகள் தலைவரின் உருவத்திற்கு உயிரோ, உணர்ச்சியோ சிறிதுகூட இல்லை என்கிறார்கள். அதுபோல பக்தர்கள் கடவுளுருவத்திற்கு உயிரோ உணர்ச்சியோ சிறிதுகூட இல்லை என்று கூறத்தயாராக இருக்கிறார்களா என்றால், இல்லை! அவர்கள் கடவுளுருவம், எல்லாம் வல்ல அறிவும் ஆற்றலும் உடையது என்கிறார்கள். எனவேதான், பக்தர்கள் கடவுளுருவத்தை மதிப்பதற்கும், பகுத்தறிவுவாதிகள் தலைவரின் உருவத்தை மதிப்பதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு, இரண்டையும் ஒன்றாகப் போட்டு குழப்பி இடர்ப்பட வேண்டாம் என்று திருக்கூட்டத்தார்க்குக் கூறுகிறோம். பக்தர்களின் (கடவுளுருவங்களாகிய) உடைமைகளைப் பிறர் அவமதிக்கும்போது பக்தர்களுக்கு எவ்வளவு கோபம் வருமோ, அதை விடக் குறைவாகத்தான் பகுத்தறிவுவாதிகளின் (தலைவரின் உருவங்களாகிய) உடைமைகளைப் பிறர் அவமதிக்கும்போது பகுத்தறிவுவாதிகளுக்குக் கோபம் வரும்.

தலைவரைப்பற்றிய கருத்துக்களைப் பக்த கோடிகள் அவமதித்தால், அதனைக் கேலிச் சிரிப்புடன் எதிர்த்துநிற்க பகுத்தறிவுவாதிகள் எப்பொழுதும் தயாராகவே இருக்கிறார்கள். அதுபோல கடவுளைப்பற்றிய கருத்துக்களைப் பகுத்தறிவுவாதிகள் அவமதித்தால், அதனை ஏளனச்சிரிப்புடன் எதிர்த்து நிற்க பக்தர்கள் தயார்தானா என்று கேட்டால், அந்த உரம் அவர்களிடம் இருப்பதில்லை. அவர்கள் சினந்து, சீறியெழுந்து, பிறகு நிற்கமாட்டாமல் முக்காடிட்டு ஓடி மறைவதைத்தான் நடைமுறையில் பார்க்கமுடிகிறது. காரணம் என்ன என்றால், பக்தர்கள் காரண காரிய விளக்கமின்றி பகுத்தறிவுக் கருத்துக்களை அவமதிக்க முற்படுகின்றனர்; பகுத்தறிவுவாதிகள் அதற்கு எதிராக அறைகூவல் விடுக்கத்தொடங்கினால், பக்தர்கள் ஓடி ஒளிகிறார்கள். ஆனால் பகுத்தறிவுவாதிகள் கடவுளைப்பற்றிய கருத்துக்களில் பலவற்றைக் காரணகாரிய விளக்கத்தோடு, மதிக்கமறுக்கின்றனர்; அதற்கு எதிராக அறைகூவல் விடுக்கமுடியாமல் பக்தர்கள் ஓடிஒளிகின்றனர். இரண்டு நிலையிலும் பகுத்தறிவுவாதி தான் முன்னேறுகிறான்; பக்தன் இரண்டு நிலையிலும் பின்னடையவே செய்கிறான்.

சில சமயங்களில், தலைவரின் படம் பக்தனால் கிழித்தெறியப்படுதல் போன்ற அவமதிப்புச் செயல்கள் நடைபெறுமேயானால், அதற்காகப் பகுத்தறிவுவாதிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதில்லை; ஏளனச்சிரிப்பு சிரித்துக்கொண்டேயிருப்பான்; உயிரற்ற பொருள் ஒன்று அவமதிக்கப்பட்டதாகக் கருதுவானே ஒழிய, உயிருள்ள பொருளுக்குக் கேடுவந்து விட்டதாகக் கருதமாட்டான். ஆனால் கடவுளுருவம் அவமதிக்கப்பட்டால், உயிருள்ள பொருளுக்கே கேடுவந்து விட்டதாகத்தான் பக்தன் கருதுவான். எனவே கடவுளுருவத்திற்குப் பக்தனால் கற்பிக்கப்படும் தன்மையும், தலைவரின் உருவப்படத்திற்குப் பகுத்தறிவுவாதியால் கற்பிக்கப்படும் தன்மையும் ஒரே தன்மையன அல்ல என்பதைத் திருக்கூட்டத்தார் உணரவேண்டும்.

படம், தலைவரை நினைவூட்டும் சின்னமாகப் பகுத்தறிவுவாதிகள் கருதுவதைப்போல, கடவுளுருவம் கடவுளை நினைவூட்டும் சின்னமாகப் பக்தர்கள் கருதுகின்றனர் என்று வினவெழுப்பியுள்ள திருக்கூட்டத்தார் கூறுகின்றனர். உள்ளபடியே பக்தர்கள் கடவுளுருவத்தை அறியும் ஆற்றலும், உணர்ச்சியும் அற்ற ஒரு நினைவுச்சின்னமாகக் கருதுவதில்லை; அதனை எல்லாம்வல்ல கடவுள் என்றுதான் கருதி வழிபட்டு வருகின்றனர். அந்தக் கடவுளுருவம் எல்லாம் வல்லது, ஐம்புலனறிவு படைத்தது, உணர்ச்சியுடையது என்று பக்தர்கள் கூறும்போதுதான் அந்தக்கூற்றைப் பகுத்தறிவுவாதிகள் வன்மையாக மறுக்கவும், வெறுக்கவும் செய்கின்றனர்.

தலைவரின் படத்தைப் பகுத்தறிவுவாதிகள் நினைவுச்சின்னமாகக் கொள்கின்றனர் என்றால், அப்படி ஒரு தலைவர் இருந்தார் அல்லது

இருக்கிறார் என்று திட்டவட்டமாக ஆராய்ச்சிக்கு ஒத்துவரும் ஆதாரங்களோடு சுட்டிக் காட்ட முடிகிறது. அதுபோலத்தான் கடவுளுருவம் கடவுளை நினைவுபடுத்தும் நினைவுச்சின்னம் என்றால், அப்படிப்பட்ட உருவம் தாங்கிய கடவுள் இருந்தார் அல்லது இருக்கிறார் என்று எந்தப்பக்தர்களும் திட்ட வட்டமாக ஆதாரங்களோடு சுட்டிக்காட்ட இயலவில்லையே! தலைவர் இருந்தார் அல்லது இருக்கிறார் என்பதற்குப் பகுத்தறிவுவாதி காட்டும் திட்டவட்டமான ஆதாரங்களைப் போல், ஆனைமுகக்கடவுள் — ஆறுமுகக்கடவுள் — காளைமுகக் கடவுள் — பன்றிமுகக்கடவுள் போன்ற கடவுள்கள் இருந்தார்கள் அல்லது இருக்கிறார்கள் என்பதற்கு ஏன் எந்தப்பக்தனும் திட்டவட்டமான ஆதாரங்கள் காட்ட முடியவில்லை? எனவேதான் கடவுளுருவம் என்பது தலைவரின் படத்தைப்போன்றதொரு நினைவுச்சின்னம் ஆகாது, அது பக்தர்களால் மூடத்தனமாகக் கற்பித்துக் கொள்ளப்பட்ட கற்பனை உருவம் என்கிறோம்.

கடவுளுருவங்கள் சில குறிப்பிட்ட தத்துவங்களை நினைவுபடுத்துவதற்காகக் கற்பித்துக்கொள்ளப்பட்ட நினைவுச்சின்னங்கள் என்று சில பக்தர்கள் வாதிட முன்வரக் கூடும். கடவுளுருவத்தைப் பார்ப்பதன் மூலம் தெரிந்துகொள்ள வேண்டியவை சில தத்துவங்கள்தாம் என்றால், அந்த உருவத்துக்கு அறிவு ஆற்றல் உணர்ச்சி ஆகியவை இல்லை என்பதையும், அதற்கு வணக்கஞ் செலுத்தவோ — வாழ்த்துரை கூறவோ — சூடம் சாம்பிராணி காட்டவோ — சுண்டல் படைக்கவோ — சாமரம் வீசவோ வேண்டிய அவசியமில்லை என்பதையும் திருக்கூட்டத்தார் ஒப்புக்கொள்ள முன்வரவேண்டும். அந்தப்படி பார்த்தால் தத்துவங்களைப் புரிந்து கொள்வதுதான் முக்கியமே ஒழிய, மற்ற தூபதீப நைவேத்திய வழிபாடுகள் அனைத்தும் தேவைப்படாதவைகள் என்று ஆகும். அப்படிப்பட்ட வழிபாடுகளை மறுப்பதும், வெறுப்பதும் எப்படித்தவறாகும்.

கடவுளுருவங்களுக்குக் கற்பிக்கப்படும் தத்துவங்களை ஏற்றுக்கொள்ள பகுத்தறிவு வாதிகள் தயார்தானா? என்ற வினாவைத் திருக்கூட்டத்தார் மேற்கொண்டு எழுப்பக் கூடும். தத்துவங்களைப் பகுத்தறிவுவாதிகள் ஆராய்ந்து பார்க்கும்போது, எவைஎவை பகுத்தறிவுக்கு ஒட்டி வருகின்றனவோ, அவ்அவற்றை ஏற்றுக்கொள்வார்கள்; எவை எவை பகுத்தறிவு ஆராய்ச்சிக்கு ஒத்துவரவில்லையோ, அவ்அவற்றை ஒதுக்கித் தள்ளுவார்கள். ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருக்கிற தத்துவங்களை நினைவுபடுத்திக் கொள்ள, கடவுளுருவங்கள் தேவையில்லை: அத்தத்துவங்களை ஒட்டியோ அல்லது கற்றூண்களிலோ அல்லது கற்பலகைகளிலோ எழுதி வைத்துக்கொண்டுகூட நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

பகுத்தறிவுவாதிகள் தலைவரின் உருவச் சிலையை மதிக்கும் முறைவேறு: பக்தர்கள் கடவுளினுருவச்சிலையை மதிக்கும் முறை வேறு. பக்தர்களின முறை, மறுத்து, வெறுத்து ஒதுக்கப்படவேண்டிய முறை என்றுதான் நாம் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறோம்.

பகுத்தறிவுவாதிகள் தம் தலைவரின் உருவப் படத்தை எந்த அளவில் மதிக்கிறார்களோ, அதே அளவில் கடவுளுருவப்படத்தை மதிக்க, அருள்நெறித்திருக்கூட்டத்தார் முதலில் முன்வந்தால், அதுவே இப்போதைக்குப் போதுமானது. அந்த அளவுக்கு வர, திருக்கூட்டத்தார் தயார்தானா?

எனவே குருட்டு நம்பிக்கைக்கும், மூடப் பழக்க வழக்கத்திற்கும் காரணமாக இருக்கும் கடவுளுருவத்தைப் பகுத்தறிவுவாதிகள் மறுப்பதும், வெறுப்பதும் தவறில்லை என்று திருக்கூட்டத்தார் உணர்வார்களாக!

ஃ ஃ ஃ

வினா: "பலகட்சிக் கூட்டணி அமைத்தவர்களில் சிலர் தாங்கள் தேர்தலுக்காக ஒன்று சேரவில்லை என்று கூறுகின்றனர். இதுதான் எனக்குப் புரியவில்லை." என்று முதலமைச்சர் காமராசர் அவர்கள் லயோலாக் கல்லூரியில் பேசும்போது குறிப்பிட்டுள்ளாரே அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம்: தோழர் காமராசர் அவர்கள் "தனக்குப் புரியவில்லை" என்று கூறுவதில் வியப்பு ஏதுவுமில்லை. ஏனெனில் அரசியல் நுணுக்கங்களை அவ்வளவு எளிதாகப் புரிந்து கொள்ளும் அறிவாற்றல் அவருக்குக் கிடையாது என்பதை அவர் பல பொழுதுகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். எனவே அவரிடம் நாம் மிகவாக எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால் அவர் வழக்கம்போல் வாயை மூடிக்கொண்டு, நிலைமையை இயற்கைக்கு விட்டுவிட்டு வாளாய், பதவி பொம்மையாய் வீற்றிருந் திருக்கலாம். 'நுணலும் தன் வாயால்கெடும்' என்ற பழமொழிக்கிணங்க, தம் திறவாத வாயை லாயோலாக் கல்லூரியில் திறந்து ஏதேதோ உளறிக்கொட்டித் தம் அறியாமையை வெளிப்படுத்தியுள்ளார். அவரது

அறியாமை கண்டு நாம் எக்கொலிகொட்டி நகைப்பதா அல்லது கழிவிரக்கங்கொண்டு வருந்துவதா என்று தெரியவில்லை!

கூட்டணி என்று பல அரசியல் கட்சிகள் இணைந்து ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டால், அது தேர்தல் ஒன்றிற்காகத் தான் அமைக்க முடியும், வேறு எந்த காரியத்திற்கும் அமைக்க முடியாது என்று தோழர் காமராசர் எண்ணிக்கொண்டிருப்பது அவரது அறியாமையை வெளிப்படுத்துவதாகும்.

தேர்தல் நெருங்கும்போது, தேர்தலுக்காக என்று ஒரு கூட்டணி அமைந்தாலும் அமையக்கூடும்: அமையாமற் போனாலும் போகக் கூடும். அப்படி ஒன்று அமையும்போது, காங்கிரசிற்கு எதிரான எல்லாக் கட்சிகளும் அந்தக் கூட்டணியில் இணைந்திருந்தாலும் இருக்கக்கூடும்; சில கட்சிகள் இணையாமல் ஒதுங்கிப் போனாலும் போகக்கூடும். இப்பொழுது தமிழ் மாநிலம் புது அமைப்புக்கு என்று நிறுவப்பட்டுள்ள கூட்டணியே பின்னால் தேர்தலுக்கான கூட்டணியாக மாறினாலும் மாறக்கூடும்; அல்லது இந்தக் கூட்டணியைத் தவிர்த்துத் தேர்தலுக்கான வேறு ஒரு புதுக்கூட்டணி அமைந்தாலும் அமையக்கூடும்; அல்லது முதலில் கூறியது போல ஒரு கூட்டணியும் அமையாமற்போனாலும் போகக்கூடும். இவையெல்லாம் காலம் செல்லச் செல்ல, தேர்தல் நெருங்கும்போது, வளர்ந்துவரும் நிலைமைகளுக்கு ஏற்ப கண்டு கொள்ளப்படவேண்டியனவாகும்.

இப்பொழுது அமைந்துள்ள சர்வகட்சிக் கூட்டணி தமிழ் மாநில புது அமைப்புக்கு என்றுதான் அமைக்கப்பட்டதே ஒழிய, தேர்தலுக்காக என்று அமைக்கப்பட்டதல்ல. இதைச் சர்வகட்சிக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு நாணயப் பொறுப்போடும், நேர்மையுள்ளத்தோடும் எடுத்துச் சொல்லியும், விளக்கிக்காட்டியும் தோழர் காமராசர் உண்மையைப் புரிந்துகொள்ள மறுக்கிறார் என்றால், ஒன்று அவர் வடிகட்டிய முட்டாளாக இருக்கவேண்டும் அல்லது கடைந்தெடுத்த, அரசியல் நாகரிகமற்ற அற்பராக இருக்கவேண்டும்.

இப்பொழுது அமைந்துள்ள கூட்டணி, பல்வேறு கட்சிகளிடையே ஏற்படுத்தியிருக்கும்—ஏற்படுத்தும் நல்லுறவு மனப்பான்மை, தேர்தல் காலத்தில் தேர்தலுக்கான கூட்டணியை அமைக்கத் தூண்டக்கூடும். அந்த நிலை இப்பொழுதே ஏற்பட்டுவிட்டது என்று தோழர் காமராசர் கற்பனை செய்துகொள்வது, அவரது அச்சத்தையும், அறியாமையையும் வெட்டவெளிச்சமாக்கிக் காட்டுவதாகும்.

அகில இந்திய ஆட்சி மொழியைப்பற்றியும், மாநிலங்களுக்கிடையே கொள்ளவேண்டிய தொடர்பு மொழியைப்பற்றியும் முடிவுகாண பெரியார், ஆச்சாரியார், அண்ணா, ம. பொ. சி, பி. டி. இராசன், சேதுப்பிள்ளை, இராமசாமி சாத்திரி, டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், கே. ஏ. பி. விசுவநாதம், வரதராசனார் போன்ற பலரும் ஒரு அணியாக ஒன்றுகூடினர். அது போலவே புத்தர் விழாவைக் கொண்டாட பி. டி. ராசன், பெரியார், காமராசர், புத்த பிட்சுக்கள் ஆகியோர் ஒரு அணியாக அமைந்திருக்கின்றனர். இந்த இரண்டு அணிகளின் முக்கிய நோக்கம் தேர்தலில் போட்டியிடுவது தான் என்று கூறினால், அது பொருந்துமா? கூட்டணி ஒன்று அமைகிறது என்றால் அது தேர்தலுக்காகத்தான் இருக்கவேண்டுமென்று தோழர் காமராசர் கூறுவது, எவ்வளவு பைத்தியக்காரத்தனமாகும் என்பதை, அவரே அவரது கூற்றை மேற்கண்ட இந்தக் கூட்டணிகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் விளங்கிக் கொள்ளலாமே! அவரால் விளங்கிக்கொள்ள இயலவில்லையென்றால், பிறர்மூலமாகவாவது விளங்கிக்கொள்ள முயலலாமே!

தேர்தலுக்கும் மேற்கண்ட இந்திக் கூட்டணிக்கும்—புத்தவிழாக் கூட்டணிக்கும் இப்பொழுது எப்படி எவ்விதத் தொடர்புமில்லையோ, அப்படித்தான் தேர்தலுக்கும் மாநிலப் புதுஅமைப்புக் கூட்டணி (சர்வகட்சிக் கூட்டணி)க்கும் எவ்விதத் தொடர்பும் இப்பொழுது இல்லை என்பதை நல்லறிவாளர்கள் தெளிவாக உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை.

—இரா. நெ.

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

இலங்கைக்கு வி. பி. மூலம்
ஆண்டுக் கட்டணம் 7—8—0

கருத்துக் கதிர்

அறையில் நடந்தது அம்பலம் ஏறுகிறது

"ஸ்டாலின் 30 ஆண்டுகள் ரஷ்யாவின் அதிபராக இருந்தகாலத்தில், சின்னஞ்சிறு குழந்தைகள் உள்பட ஏராளமானவர்களைப் படுகொலையும், சித்திரவதையும் புரிந்தார். சென்ற உலகப்பெரும்போரின் ஆரம்பக் கட்டத்தில் சர்ச்சிலின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் நடந்துகொண்டதால் தோல்விக்கு ஸ்டாலினே காரணமாக இருந்தார். போருக்கு முன்னால் ஆட்சிப்பீடத் தலைவர்களைக் கூண்டோடு வெளியேற்றியதன் மூலம் நாட்டுமக்களின் மனஉறுதியைக் குலைத்துப் பொருளாதார நிலைமைக்கும் தீங்கு விளைவித்தார். ஸ்டாலின் தத்துவத்தின் செப்பிடு வித்தையிலிருந்து சோவியத் மக்களை விடுவிக்க இந்த இரகசியங்களை அம்பலப்படுத்துவதொன்றே வழி என்பதாலே இவை வெளியிடப்படுகின்றன" என்று சோவியத் கம்யூனிசுட்டுக்கட்சிச் செயலாளர் தோழர் நிகிடா குருசேவ், கம்யூனிசுட்டுக்கட்சி மாநாட்டில், பாதுகாப்பு விவகாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டாராம். இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று உலக அரசியல் வல்லுநர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். போகப்போகக் காரணம் தெரியும்.

* * *

உருப்படாத உல்லாசப் பதவி

இந்திய யூனியன் குடியரசுத் தலைவர் பதவி வகிக்க மௌலானா ஆசாத்திற்கு விருப்பந்தானா என்று நிருபர்கள் மாநாட்டில் நிருபர் ஒருவர் ஆசாத்தைக் கேட்டபோது, "அந்தப் பதவியில் இருந்து நான் முழுவதற்கும் என்ன வேலையைச் செய்ய முடியும்? நல்ல சொகுசான வீடும் அழகான தோட்டமும் கிடைக்கும் என்பது உண்மை" என்று அவர் விடையிறுத்தாராம்.

இத்தகைய உருப்படாத உல்லாசப் பதவிக்குத்தான் ஆண்டு ஒன்றுக்கு இருபது லட்ச ரூபாய் பொதுமக்கள் வரிப்பணத்திலிருந்து பாழாக்கப்படுகிறது!

* * *

வரி விதிக்காமல் பணம் திரட்டும் வழி

இந்தியா, பணத்தைப்பற்றிக் கவலைப்படாமலும், புதிய வரிகள் விதிக்கவேண்டிய இன்றியமையாமையில்லாமலும் ஐந்தாண்டுத் திட்டங்களைப்போல பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆண்டு ஒன்றிற்கு ரூ. 1600 கோடி பெற வழியிருக்கிறது என்று, கனரா இன்டஸ்ட்ரியல் பாங்கிங் சிண்டிகேட் தலைவர் டாக்டர் டி. எம். ஏ. பாய் அவர்கள், 18-3-56 இல் சென்னைச் செய்தி நிருபர் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியாவின் மக்கள் தொகையில் 18 கோடி மக்கள் இன்ஷ்யூர் செய்யக்கூடியவர்கள். ஏராளமான மாதச்சம்பளம் பெறுவோர் இருக்கின்றனர். மாதம் நூறு ரூபாயும் அதற்கு மேலும் சம்பளம் வாங்குவோர் குறைந்தது பத்து சதவிகிதம் இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம் செலுத்தவேண்டும் என்று சட்டம் வேண்டும். சராசரியில் ஆண்டிற்கு ரூ. 90 அல்லது ரூ. 100 பிரீமியம் தொகை செலுத்துவதாக வைத்துக்கொண்டாலும், ஆண்டு ஒன்றிற்கு ரூ. 1600 கோடி கிடைக்கும். ஆண்டுக்கு ஆண்டு இத்தொகை கிடைத்தால், மரணம் அல்லது பாலிசி பூர்த்தி அடைவதன்மூலம் திருப்பிக் கொடுக்கவேண்டிய தொகை குறைவாகத்தான் இருக்கும். அதுவும் முதலில் சில ஆண்டுகளுக்கு இது மிகச் சொற்பமாகத்தான் இருக்கும். சுமார் மூன்று, நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களை அதற்குள் நிறைவேற்றிவிடலாம், இத்திட்டத்தின்மூலம் உடனடியாக ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கும்" என்பது அவர் கருத்துரையாகும். அரசியலார் இந்த வழியில் போதுமான அளவுக்கு நாட்டம் செலுத்தினால், உருவான பலன்கள் ஏற்படக்கூடும்.

* * *

சர்வாதிகாரம் மறைந்து சனநாயகம் மலர்கிறது

"ரஷ்யாவில் சர்வாதிகார ஆட்சி இனித் திரும்பாது. அது மலையேறிவிட்டது. கூட்டு ஆட்சி முறை ஏற்பட்டிருக்கிறது. எல்லாக் களங்கங்களும் நீக்கப்பட்டுவிட்டன. மேலும் எல்லாவற்றிற்கும் சிகரமாக, அதிமுக்கியமான

தாகக் கூட்டுத்தலைமையை எதிர்த்துப் பேசவும் உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. எதிர்த்துப் பேசினால் துரோகிகள் என்று குற்றஞ் சாட்டப்படக்கூடுமோ என்று இனி அஞ்ச வேண்டியதில்லை,'' என்று ரஷ்யாவின் முன்னாள் முதலமைச்சர் மாலங்காவ், இலண்டனில் தொழிற்கட்சியைச் சேர்ந்த சில்வர்மன் அளித்த பாராட்டு விருந்தின்போது 19—3—56இல் பேசியுள்ளார்.

ரஷ்யாவில் சர்வாதிகாரம் மறைந்து சனநாயகம் மலர்கிறது என்னும் செய்தி உலகஅரசியல் அரங்கில் நல்ல மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் பெறும் என்பதில் ஐயமில்லை. சனநாயகம் தனக்கேயுள்ள ஒரு சில குறைபாடுகளைக் கொண்டிருந்தபோதிலும், மற்றெல்லா அரசியல் முறைகளைக்காட்டிலும் அந்த ஒரு முறைதான் இன்னமும் சிறந்த முறையாக இருந்துவருகிறது.

* * *

அதில் உண்மை இருக்கிறது

“இந்தியா சுதந்திரம் பெற்று எட்டு ஆண்டுகள் ஆகின்றன. இந்த எட்டு ஆண்டுகளில், பலதுறைகளில், சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பெரியபெரிய அணைக்கட்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. பெரிய பெரிய மின்சார நிலையங்களும், தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இவைகள் எல்லாம் தென்னாட்டைவிட வடநாட்டில்தான் அதிகம் என்று எல்லாரும் புகார் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது என்பதை இப்பொழுது எல்லாரும் ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள்.''

—11-3-56—‘கல்கி’-துணைத்தலையங்கம்.

* * *

“வேண்டாம்”—“வேண்டும்” கிளர்ச்சிகள்

“ராஜ்ய புனரமைப்புத் திட்டங்கள் வெளிவரத் தொடங்கியதிலிருந்து சென்னை ராஜ்யத்தில், ‘வேண்டாம்’ என்றும், ‘வேண்டும்’ என்றும் இரண்டு விதமான கிளர்ச்சிகள் தோன்றி வந்திருக்கின்றன.

“‘வேண்டாம்’ என்பது தட்சிணப் பிரதேச அமைப்புக்காக எழுந்த சிலரது (?) குரல். ‘வேண்டும்’ என்பது கேரளாவிலுள்ள தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்கும்படி பெரும்பாலோர் வெளியிட்ட குரலாகும்.

“சிலரது (?) கோரிக்கைக்கு இணங்கிய சர்க்கார், பெரும்பாலோரது கோரிக்கையைக் கைவிட்டிருப்பது குறித்து வருத்தப்படாமலிருப்பதற்கில்லை.''

“அடுத்தாற்போல், பெல்லாரி தாலூகாவை ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் ஆந்திராவுடன் சேர்க்கலாம் என்று யோசனை தெரிவித்ததை மாற்றி, மசோதாவில் அதை இந்திய சர்க்கார் மைசூருடன் இணைத்திருக்கிறார்கள்.''

“ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் கேரளத்துடனே இணைந்திருக்கவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறது. இந்தச் சிபாரிசை மாற்றியிருக்கலாமல்லவா?''

“பெல்லாரிக்கு ஒரு நியாயம், தேவிகுளம் பீர்மேட்டிற்கு ஒரு நியாயம் என்ற கொள்கை நேர்மையாகாது.''

“தமிழ்நாடு, கேரள எல்லையில் சிக்கல்களைத் தீர்க்காமல் விட்டிருப்பதைப்போலவே, ஆந்திரம்—தமிழ்நாடு எல்லையிலும் சிக்கல்களைத் தீர்க்காமலே விட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆந்திரம்—சென்னை ராஜ்ய எல்லைபற்றி மசோதாவில் பிரஸ்தாபிக்காமல் விட்டதை வரவேற்பதற்கில்லை. ஆகவே, மசோதாவில் திருத்தங்களைக் கொண்டுவர சென்னை சட்டசபையும், சர்க்காரும் முயற்சி எடுத்துக்கொள்வார்களென்று பொதுமக்கள் நம்புகிறார்கள்.''

—25-3-56: “ஆனந்தவிகடன்'' தலையங்கம்.

★

செய்திச்சுருள்

விடுதலைப் போரில் பாதிரியார்

பிரிட்டனின் ஆதிக்கப் பிடியில் சிக்கி, மத்தியதரைக்கடலில் இருக்கும் சைப்ரஸ் விடுதலை வேட்கைகொண்டு வீறிட்டெழுந்திருக்கிறது. பிரிட்டனின் அடிமைத்தளையினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு தாயகப் பகுதியான கிரீஸோடு இணைந்துகொள்ள அது துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறது. இந்த விடுதலைக் கிளர்ச்சியை முன்னின்று நடத்துபவர் மாகோரியோஸ் என்னும் பாதிரியாராவர். அவர் பிரிட்டிஷ் ஆட்சியினரால் இப்பொழுது நாடுகடத்தப்பட்டிருக்கிறார். பாதிரியாரின் மதப்பற்று அவரது நாட்டுப்பற்றை விழுங்கிவிடவில்லை என்பது பாராட்டிக் குறிப்பிடவேண்டியதாகும்.

* * *

இதுவும் அங்கேதான்

வடநாட்டிலுள்ள துர்க்காபூரில், 10 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் வாய்ந்த எஃகுத் தொழிற்சாலையை அமைப்பதற்கான முயற்சியைப் பிரிட்டிஷாரின் ஒத்துழைப்போடு மேற்கொள்ள இந்தியப்பேரரசினர் முற்பட்டுள்ளனர். இது இந்தியப் பேரரசினர் மேற்கொள்ளும் மூன்ருவது முயற்சியாகும்.

இதற்கு முன்பு ரூர்க்கலா, பிலாய் ஆகிய இரு இடங்களிலும் முறையே செர்மானியர், ரஷ்யர் ஆகியோரின் ஒத்துழைப்போடு இரண்டு பெரிய எஃகுத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வேலைகள் நடந்தேறி வருகின்றன. இவற்றைத் தவிர டாடாவின் பெரிய இரும்புத் தொழிற்சாலையும் வடநாட்டில்தான் இருக்கின்றது.

தென்னுட்டில் அத்தகைய பெரியதொரு தொழிற்சாலையை நிறுவும் எண்ணத்தை இந்தியப் பேரரசினர் இதுவரையில் மேற்கொள்ளவில்லை. வடநாட்டை வளப்படுத்துவதுதான் இந்தியப் பேரரசின் முக்கிய நோக்கமாகும் என்பதை இதிலிருந்து எவரும் தெரிந்துகொள்ளலாம்.

* * *

தமிழக அகதிகள்

இலங்கையிலிருந்து தமிழகம் வந்து சேர்ந்துள்ள அகதிகள் 1954 அக்டோபர் 19-ஆம் நாளிலிருந்து 1956 பிப்ரவரி 19-ஆம் நாள் வரையில் மொத்தம் 21955 பேர் ஆவார்கள் என்றும், அவர்களில் 7597 பேர்கள் இலங்கை அரசினரால் வெளியேற்ற நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் சென்னை நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் கேள்விக்கு விடையளிக்கும்போது அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

* * *

திராவிடத்தில் எண்ணெய் ஊற்றுகள்

திராவிடத்தில் கோதாவரி, கிருட்டிணு, காவிரி ஆற்றுப் பகுதிகளில் எண்ணெய் ஊற்றுகள் கிடைக்கக்கூடிய படிவங்கள் காணப்படுகின்றன என்றும், இதனுல் இந்தப் பகுதிகளில் நிலஅமைப்பு ஆராய்ச்சி ஏற்படுவது இயலுவதான ஒருசெயல் என்றும் இந்திய இயற்கைவள அமைச்சர் அண்மையில் பாராளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார்.

* * *

அடிமை அறிவின் அறிகுறி

இந்தி மொழிகளில் மசோதாக்களையும், சட்டங்களையும் அச்சிடுவதற்காகச், சென்னை அரசியலார், ஒரு இலட்சத்து இருபதினுயிர ரூபாய்க்கு அச்சுப்பொறிகள் வாங்க திட்டமிட்டிருக்கின்றனராம். இந்த முறையில் வடநாட்டு இந்தி ஏகாதிபத்யத்துக்கு அடிமைபோகும் தம் அடிமை அறிவைச் சென்னை அரசியலார் காட்டிக்கொண்டுள்ளனர்.

* * *

புதிய மாநில அமைப்பு

புதிய மாநில அமைப்பு மசோதாவின்படி இந்தியாவில் 15 அரசுகளும், 7 மத்திய ஆட்சி நிருவாகத்திற்குட்பட்ட பகுதிகளும் இருக்குமாம்.

(1) ஆந்திரர்—தெலிங்கானா, (2) அசாம், (3) பீகார், (4) குஜராத், (5) கேரளா, (6) மத்திய பிரதேசம், (7) சென்னை, (8) மகாராஷ்டரா, (9) மைசூர், (10) பஞ்சாப், (11) ஒரிசா, (12) ராஜஸ்தான், (13) உத்திரபிரதேசம், (14) மேற்கு வங்கம், (15) ஜம்மு—காஷ்மீர் என்பவைதாம் அந்தப் பதினைந்து அரசுகள்.

(1) பம்பாய், (2) டில்லி, (3) இமாசலப்பிரதேசம், (4) மணிப்பூர், (5) திரிபூரா, (6) அந்தமான்—நிக்கோபார் தீவுகள், (7) இலட்சத்தீவுகள், மினகாய், அமிந்திவ் தீவுகள் என்ற ஏழு பகுதிகளும் மத்திய ஆட்சி நிருவாகத்திற்குட்பட்ட பகுதிகளாகும்.

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சிச்சித்தூர், பாலக்காடு ஆகிய தாலுக்காக்கள் அப்படியே கேரளத்துக்குப் போகும், அந்தத் தாலுக்காக்களிலுள்ள தமிழ் மக்கள் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைப்பதற்கான வழி மசோதாவில் வகுக்கப்படவில்லை.

ஆந்திராவிலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்ப்பதற்கான வழியும் வகுக்கப்படவில்லை.

கொள்ளேகாலம், மலபார் மாவட்டம், காசர்கோடு பகுதிகளைச் சென்னை இழக்கும்.

தமிழகத்தோடு சேரவேண்டிய செங்கோட்டைத் தாலுக்காவின் பெரும்பகுதியைக் கேரளத்திடமே ஒப்படைக்கும்.

திரு—கொச்சியிலிருந்து அகத்தீஸ்வரம், தோவாளை, விலவங்கோடு, கல்குளம் ஆகிய தாலுக்காக்கள் தமிழகத்தோடு சேரும்.

இந்தியா ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு ஆலோசனை அவை நிறுவப்படும். மண்டலங்களின் செலவுப் பொறுப்புக்களை மத்தியப் பேரரசு ஏற்கும்.

தென் மண்டலத்தில் ஆந்திரம், மைசூர் (கருநாடகம்), கேரளம், சென்னை (தமிழகம்) ஆகியவை உறுப்புக்களாக அமையும்.

மசோதா அப்படியோ அல்லது சில திருத்தங்களோடோ சட்டமாக்கப்பட்டு, 1956 அக்டோபர் 1-ஆம் நாள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

* * *

வெள்ளையரை மிஞ்சிய அடக்குமுறை தர்பார்

பம்பாய் நகரை மராட்டியத்தோடு சேர்க்க வேண்டும் என்று உரிமை வேட்கையுற்றுக் கிளர்ந்தெழுந்த மராட்டிய மக்கள்மீது, பம்பாய் காங்கிரசு அரசினர், வெள்ளைக்கார ஏகாதிபத்யத்தை மிஞ்சிவிடும் வகையில் அடக்குமுறை தர்பாரை அண்மையில் நடத்திக் காட்டியிருக்கிறது.

பம்பாய்க் கலவரத்தின்போது போலீசார் 2742 குண்டுகளைச் சுட்டனர். 442 முறைகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. [illegible] பேர் குண்டுகளுக்கு இரையாயினர். 312 பேர் படுகாயமுற்றனர்.

* * *

வாழ்வு பெறும் வடநாட்டு அகதிகள்

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு ஓடி வந்துள்ள அகதிகளுக்கு வாழ்வும், வசதியும் தேடித்தர இந்தியப் பேரரசு இதுவரையில் ரூ. 281 கோடி செலவழித்திருக்கிறது. இதைத்தவிர ஒவ்வொரு மாநில அரசும் தனித்தனிப் பொறுப்பேற்று அந்த வடநாட்டு அகதிகளுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்திருக்கிறது.

நடைமுறை ஆண்டில் அந்த அகதிகளுக்குச் செலவிட இந்தியப் பேரரசு ரூ. 34 கோடி ஒதுக்கியிருக்கிறது.

ஆனால் இலங்கையிலிருந்து திராவிடம் வந்து சேரும் அகதிகளைப்பற்றி கவலைப்படவோ, அவர்களுக்கு சல்லிக்காசு தரவோ இந்தியப் பேரரசு முனையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தென்னாட்டின் வரிப் பணமும் வடநாட்டவரின் வாழ்வுக்குத்தான் என்பது இதனால் திட்டவட்டமாக இந்தியப் பேரரசால் வலியுறுத்தப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1071

கல்லறை சொன்ன கதை

★

(செல்வன்)

என்னைப்பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. வாழ்ந்த காலத்தில் என்னைப் பற்றி எண்ணியிருக்காவிட்டாலும், வீழ்ந்த காலத்திலாவது என்னைப்பற்றிய எண்ணம் அடிக்கடி எழத்தான் செய்யும். நான் கிராமத்தில் இருக்கும்பொழுது அந்த மக்களைப் போலவே ஆடம்பரமின்றி எளிய தோற்றத்துடன் காட்சியளிக்கிறேன். 'ஊருடன் ஒத்து வாழ்' என்பதற்கேற்ப நகரத்தில் கொஞ்சம் நாகரிகமாக இருக்கிறேன். கிராமத்தில் இருப்பதுபோல் நகரங்களில் என்னை அவ்வளவாக ஒதுக்கி வைப்பதில்லை. கிராமத்தில் இருப்பதுபோல் வெட்டவெளியாக இல்லாமல், வேலியிட்டுக் காவல்காரன் ஒருவனையும் எனக்காக நியமித்திருக்கிறார்கள். கிராமத்து மக்களைப் போலன்றி வாழ்க்கையை எத்தனையோ கோணங்களில் பார்க்கும் மக்களை நான் நகரத்தில் பார்க்கிறேன். இருந்து கொடுத்தது போல், இறந்தும் வரி கொடுங்கள் என வாங்குவதில் மும்முரமாக இருப்பான் என் காவல்காரன்.

'ஏன்' என்று கேட்கவோ, 'ஐயோ' என்று அலறிப்புடைத்து அழவோ ஆளின்றி அனாதையாக இறக்கும் எத்தனையோ மனித உருவங்களுக்கு வரவேற்புக் கொடுத்திருக்கிறேன். இவர்கள் மாத்திரமல்ல. நாடும் நகரமும் ஒரே சோகக்கடலில் மூழ்கி நிற்க, ஏடும், ஏனைய நாட்டினரும் அவர் இறந்தது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் எனப் பறைசாற்றிய பெரிய மனிதர்கள் எத்தனையோபேர் என்னிடம் தஞ்சமடைந்திருக்கிறார்கள். வறுமைத் தேள் கொட்ட வாழ்வில் இளமை கருகி, இதழ் சருகாகி மடிந்தோர்; பொன்னும் பொருளும் இருந்தும், நோயும் நொடியும் கொண்டு நலிந்து நைந்து உயிர் துறந்தோர் இப்படி எத்தனையோ மக்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறேன். 'எட்டிப்போ' என்று எக்காளமிட்டவன், 'ஏன்சாமி' என்று பணிந்து கேட்டுக் குனிந்து கிடந்தவன், இவர்கள் எல்லோரையும் வாழ்வின் கடைசிப் பயணத்திலாவது ஒற்றுமையாக இருக்கச்செய்த பெருமை எனக்குத்தான் உண்டு.

என் நெஞ்சில் கிடக்கும் உருவங்களைப்பற்றி என்னைத்தவிர யாருக்கும் அவ்வளவாகத் தெரியாது. மயானத்தில் நடக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகளை நேரில் கண்டவன் நான். ஊராருக்கும், உற்றார் உறவினருக்கும் தெரியாத உள்ளுணர்ச்சி மயானத்தில் பெருகி வரும் நிலையில் எத்தனையோ மக்களின் வெளியிடப்படாத எண்ணங்கள் எனக்குத் தெரியும். வன் நெஞ்சர்களும், கல் நெஞ்சர்களும் கடைசி காலத்தில் சில சமயம் தங்களுடைய செய்கைகளுக்காக வருந்துதல் உண்டு. 'மயான வைராக்யம்' என்று கூறுகிறார்களே அஃதுபோல. ஒருவேளை பிழைத்தெழுந்தால் அவர்கள் பழைய பாதைக்கே திரும்பினாலும் திரும்பலாம். இறந்தவர்கள் மட்டும் தான் அவர்களின் இதயத்தை என்னிடம் திறந்து பேசுகிறார்கள் என்று நினைக்காதீர்கள். உயிரோடு இருப்பவர்கள் கூட உலகுக்கு பயந்து, சந்தடியில்லாத இரவு நேரங்களில் என்னைத் தேடி வந்து அவர்களின் குறையைக் கூறி குமிறிக்கொட்டுவார்கள். அதோ! ஆம். அவன் தான். அவன் பெயர்... ஆம் அவன் பெயரைச் சொல்ல மாட்டேன். அவனது கதை சோகக்கதை தான். சாதி சமயம், ஏழை பணக்காரன் என்று பார்த்து வகுத்துக் காதலைத் தடைசெய்யும் உங்கள் சமூகச் சாக்கடையில் நெளியும் எத்தனையோ புழுக்

களில் ஒருவன். அவன் எதிர்வீட்டில் வாழ்ந்த இளம் பெண்—அவன் பள்ளித்தோழி—அவனைக் காதலித்தாள். அவளோ உயர்ந்த வகுப்பினர் எனப் பெருமைபடுத்திக் கூறிக் கொள்ளும் வகுப்பில் பிறந்தவள். மேலும் பணக்காரன் ஒருவனின் ஒரே புதல்வி. இவன் குலத்தில் அவளுக்கும் தாழ்ந்தவனும்! குணத்தில் உயர்ந்தவன் தானே! அதை யார் கேட்கிறார்கள்? குலம் தானே தாழ்ந்தது. பணம் அதிகம் இருந்தாலும் எப்படியாவது அப்பாவைச் சம்மதிக்கச் செய்வேன் என்று எவ்வளவோ முறை கூறினாள் அந்த எதிர் வீட்டு ஏந்திழை. அவன் பாட்டன், பூட்டன் சொத்து சுகம் ஏதாவது வைத்துச்சென்றானா, என்ன? தன் பரம்பரை சோம்பேறிப் பரம்பரையல்ல, உழைத்துச் சாப்பிடும் உரம் உண்டு, அவர்களுக்கு வழியும் தெரியும் என்று நினைத்தோ என்னவோ, குடியிருக்கும் வீடு ஒன்று தவிர வேறு எதுவும் வைத்துவிட்டுப் போகவில்லை. படிப்பை முடித்து ஓராண்டுகூட முழுதாக ஆகவில்லை. அவனுக்கு வேலை கொடுக்க யார் காத்துக்கொண்டிருக்கிறார்கள்? நண்பர்கள், உறவினர்கள், அறிந்தவர்கள், அறிமுகமாகாதவர்கள் யார் யாரையோ பேட்டி கண்டான் வேலைக்காக. வேலை கொடுப்பதற்குப் பதில் விதவிதமான பதில் தந்து அனுப்பினார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பத்தாவது பாஸ் பண்ணியதும் ரிஜிஸ்தர் பண்ணியிருந்தான். இன்னும் வேலை காலியாகவில்லை. இதற்கிடையில், எதிர் வீட்டில் தன் மகளைக் கட்டாயப்படுத்தி வேறு ஒருவனை மணக்க வற்புறுத்தினான் அவள் தகப்பன். முதலில் தகப்பனின் வற்புறுத்தலை வெறுத்தாள். பிறகு மறுத்தாள். மறுத்தும் பயனில்லை என்ற நிலைவந்தது. இதற்கு வேறு வழி என்ன என்ற கேள்வி அவள் இதயத்தைக் குடைந்து நாளடைவில் இதே நினைவாக நைந்து, மெலிந்து படுத்த படுக்கையானாள். பார்க்காத ஜோசியம் இல்லை, பண்ணாத வைத்தியம் இல்லை. உள்ளம் கருகி உடல் எரிந்து கொண்டிருந்த அவளுக்கு மருந்தும், மாயமும் குணம் தரவில்லை. தான் இறப்பதற்குள் எப்படியாவது தன் மகளுக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்று அடிக்கடி நச்சரித்த தகப்பனின் தொந்தரவும், நிறைவேறாத தன் காதலை நினைத்து ஏக்கமும் சேர்ந்து அவளைத் தேற்றுவதற்குப் பதில் தேயவைத்தன. இந்நிலையில்தான் ஒருநாள் வீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரியைத் தன் தகப்பன் பலாத்காரம் செய்ய எத்தனித்ததைக் காண நேரிட்டது. அவன் கீழ்ஜாதி, ஏழை என்று எந்த இரண்டு காரணங்களைக்கூறி நான் காதலித்தவனைக் கைப்பிடிக்க விடாது தடுத்தாரோ, அதே இரண்டு குணங்கள் தானே அந்த வேலைக்காரிக்கும். ஆம் அவள் ஏழை, வேற்று சாதி தான். ஆனால் அவளிடம் மாத்திரம் தன் தந்தை காதல் மொழிபேசி, கலந்துறவாட விழைந்தாரே! ஏன் தந்தையுடன் வாதாடலாகாது. துணிந்து விட்டாள். வழக்கு மன்றத்தில் குற்றவாளியின் மீது குற்றப்பத்திரிக்கை வாசிப்பது போல், தன் தந்தையின் தகாத செயலைக் கண்டித்தாள். அவள் வேலைக்காரி, ஆனால் கவலையில்லை. நீ, வேற்று சாதிக்காரனைக் கல்யாணம் செய்துகொண்டால் நாலு பேர் என்ன சொல்வார்கள், நம் குலத்தவர்கள் நம்மை ஒதுக்கிவிடுவார்கள், நம் பெரும் புகழும் என்னாவது என்று கூறி அவள் வாயடைத்துவிட்டார். நிறைவேறாக் காதல், தகப்பனின் தகாதசெயல் இவற்றால் மனம் உடைந்து மாண்டாள்.

அன்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு நாளும் இரவுநேரத்தில் இந்த இளைஞன் இங்கு வந்து அவள் கல்லறையில் கண்ணீர் சிந்திவிட்டுச் செல்கிறான்.

காதலித்த பெண்ணைக் கைப்பிடிக்க முடியாமல், வாழ்வில் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருக்கும் சாதி சமயத்தையும், மூடப்பழக்கவழக்கங்களையும், பொருளாதார ஏற்றத்தாழ்வையும் குழிதோண்டிப் புதைத்து, அந்தப் பண்பட்ட நிலத்தில் கள்ளி காளான்கள் அற்ற சமுதாயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் முன்னணிக்கட்சி ஒன்றில் சேர்ந்தான் அந்த இளைஞன். தனக்கெனத் தனியாக வாழ்வு, சுகதுக்கம் எதுவுமின்றி நாட்டு மக்களின் வாழ்வே, தன்வாழ்வு; நாட்டின் உயர்வே தன் உயர்வு என்று கருதிப் பாடுபட்டான். 'பெரியமனிதர்கள்' என்ற பெயரில் பதுங்கி நாட்டில் நடமாடும் நாசகாரர்களின் நரிக்குணங்களை வெளிப்படுத்தினான்.

மகள் இறந்தபிறகு தந்தைவேறுகவலையெதுவுமின்றித் தன்னிச்சையாகத்திரிந்தார். கண்ட பெண்களுடன் திரிந்தார். மதுவிலக்குச் சட்டத்தைமீறிக் குடித்தார். அதற்கு உதவியாக உள்ளூர் தேசியக் கட்சித் தலைவரைக் கண்டு பேசி 'திடீர்' தேசியவாதியாக மாறினார். ஆமதாபாத் மில்லும், சைனாபட்டும் அலங்கரித்தமேனியைக் கதர்த்துணி அலங்கரித்தது. ஆனால் உலாவச்செல்லும் காரும், உள்ளே செல்லும் ஒயினும் அந்நியநாட்டுச் சரக்குத் தான்!

தனக்குத் தூரத்து உறவான ஒருவரைக் காரியதரிசியாக ஆக்கிக்கொண்டார். நாளைக் கொரு பொதுக்கூட்டம், வேளைக்கொரு விழா இப்படியாகக் கழிந்தன அவர் நாட்கள். உள்ளூர்ப் பிரமுகர்கள் அடிக்கடி அவர் வீட்டில் விருந்துண்டனர். அவர்களுடைய தூண்டுதலின்பேரில் அவருக்கு ஒரு ஆசை துளிர் விட்டது. ஆரம்பத்தில் தேர்தலில் நமக்கென்ன என்று இருந்தவர், தேர்தலில் வெற்றி பெற்றால் கிடைக்கும் வசதிகள், சலுகைகள் பற்றி நினைத்தார். துளிர் விட்ட இந்த எண்ணத்திற்குத் தூபம்போட சுற்றியிருந்த 'எடுபிடிகள்' உதவி செய்தன. தேர்தல் நெருங்கியது 'திடீர்த்தியாகி'யும் போட்டியிடுவதற்காகத் தேசியக்கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தல் நெருங்கிக்கொண்டு இருந்தது. தேசியத் தினசரிகள் விளம்பரம் கொடுக்க, பிரச்சாரபீரங்கிகள் வெடிக்க, சூறாவளிச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்தார்.

நடக்க இருக்கும் தேர்தலில் எதிர் வீட்டுப் 'பெரியமனிதருக்குப்' போட்டியாக நின்றான் இளைஞன் - குலம் - பணம் - இரண்டிலும் இளைஞன் அவருக்குச் சமமானவன் அல்ல. அவன் குணம் ஒன்றையே புகழ்ந்து, தொண்டு செய்யும் நல்உள்ளத்தைப் பாராட்டி அவனுக்கு ஆதரவு அளித்தனர். தேர்தல் நெருங்க நெருங்க 'பெரியமனிதர்' ஏறாத வீடெல்லாம் ஏறினார் ஓட்டுக்கேட்டு. எவனைக்கண்டாலும் கையெடுத்துக் கும்பிட்டு ''ஹி, ஹி' மறந்துடாதேங்கோ, நான் நிக்கிறேன்'' என்று பற்கள் வெளியே தெரிய பாசாங்கு செய்தார்.

தேர்தல் அன்று அதிகாலையிலிருந்து கார்கள் பறப்பதுவும், மக்கள் வருவதுமாக இருந்தார்கள். தேர்தல் முடிவு வெளிவந்தது. பணத்தை நம்பி போட்டியிட்டவர் தோற்றார். தொண்டு, குணம் இவற்றால் மக்கள் மதிப்பைப்பெற்ற இளைஞன் வென்றான். முடிவு தெரிந்து நாலைந்து நாட்கள் 'பெரியமனிதர்' வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. குடித்துக் குடித்து தன் கவலையை-தோல்வியை மறக்க முயற்சித்தார்.

ஒரு சின்னப்பயல், தன் வாழ்வில் குறுக்கிட்டுத் தனக்குத் தோல்வியைத் தருவதை அவர் வெறுத்தார். அருமையாக வளர்த்த அழகுச்சிலை, தன் ஒரேமகள் அவனைக் காதலித்தான். இப்பொழுது தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றுவிட்டான். இவனை இப்படியே விட்டுவைத்தால் நாளை........ இதற்குமேல் எண்ணுவதற்கு அவர் மனம் மறுத்தது. இத்தனைநாள் எங்கோ பதுங்கியிருந்த ஆத்திர உணர்ச்சி, தலைதூக்கியாடியது. ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவர்போல் எழுந்து வேலையாளை அனுப்பித்தேசியக்கட்சியின் தூண்களான இருவரை வரவழைத்தார். அவர்களிடம் ஏதோ பேசி இரண்டு கத்தை ரூபாய் நோட்டுக்களை நீட்டினார். அன்று இரவே 'பெரியமனிதர்' வெளியூர் சென்று விட்டார்.

என்னமோ, எனக்குக் கவலையாக இருக்கிறது. ஊரில் விஷயமறிந்த வட்டாரத்தினர், 'பெரியமனிதர்,' 'பக்திமான்', 'தேசியத் தலைவர்' அவருடன் போட்டியிட்டு, இந்தப் பாரி, சின்னப்பயல் வெற்றி பெறுவதா, இவனுக்குச் சரியான பாடம் கற்பிக்காமலா போவார் என்று பேசிக்கொள்வதைப் பார்த்தால் எனக்கு என்னமோ சந்தேகமாக.........

“அதோ, பெரிய ஊர்வலம் ஒன்று வருகிறது. என்னை நோக்கி வருகிறதே. என் வாழ்நாளில் இதைப்போன்றதொரு பெரிய ஊர்வலத்தை இதுவரை பார்த்ததேயில்லை. யார் அவ்வளவு பெரியமனிதர்...........அந்தோ! பெரியமனிதர் யாரும் இல்லை!

சின்னப்பயல்தான்! ஆம்......அந்த இளைஞன்!

நான் வருகிறேன். வழக்கமாக என்னிடம் வரும் இளைஞன் வருகிறான். நான் முதலில் காண்பித்தேனே அந்த இளைஞன்........ உங்களிடம் நான் பேசிக்கொண்டிருக்கும் இந்தச் சில மணி நேரங்களுக்குள் எவ்வளவு நிகழ்ச்சிகள் பாருங்கள்.

தன்னந்தனியாக வருவான். வழக்கமாக என்னிடம் வருவான். கொள்ளையடிப்பவனுக்கும் கொலைசெய்பவனுக்கும் உதவியாக இருக்கும் அதே இருட்டு நேரத்தில்தான் இவனும் வருவான். தன் இதயம் கவர்ந்தவளை, என்னுள்மக்கி மண்ணாகிப்போனவளை, தன் கடந்த கால இன்ப நினைவுகளை நினைத்துக் கண்ணீர் விடுப்பான். இன்று அவனும் அதே நிலையடைந்துவிட்டான். உயிரோடு இருக்கும் காலத்தில் ஒன்றாக இருக்கவிடாத அவர்களை, இறந்தபிறகாவது ஒன்றுசேர்த்துவைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே, மகிழ்ச்சி தான்! உயிரும், உணர்வும், பொன்னும், பொருளும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக அறிவும் இருப்பதாகக் கூறப்படும் உங்களால் முடியாத ஒன்றை, உயிர், உணர்வு எதுவும் அற்ற என்னால் செய்யமுடிகின்றதே அது ஒன்றே போதும்!

மனமென்பதொன்றுண்டோ?

(பேரறிஞர், ம. சிங்காரவேலு)

பண்டைக்காலந் தொடங்கி, மிகஅண்மை வரை உடலுக்குள் மனம் என்பதாக ஒன்று உண்டென்றும் அந்த மனத்தினுல் தான் நாம் எண்ணுகிறோமென்றும் நமது எண்ணம் உடலோடு சம்பந்தப்பட்டிருந்தாலும், அது உடலுக்கு அந்நியமென்றும், நமது மனம், நமக்குள்ளே தெரியுமே அல்லாது, பிறர் கண்ணுக்காகிலும், பிறர் சோதனைக்காகிலும் உட்படாவென்றும், மனோதத்துவ நூல்கள் சொல்லிக் கொண்டு வந்தன. மானவநூல் அதாவது, மனத்தைப்பற்றி பேசும் நூலுக்கும், மற்ற பூத பௌதிக நூல்களுக்கும், இதுவே வித்தியாசமாக இருந்து வந்தது. பிரபஞ்ச பொருள்கள் யாவையும், வெளிமுகமாகப் பார்க்கலாம்; வெளிமுகமாக சோதிக்கலாம். வெளிமுக (புற) ஆராய்ச்சிக்கு, சகல பொருள்களும் உட்படுகின்றன. ஆனுல் நமது எண்ணம் மாத்திரம் சூட்சும பொருளென்றும், கண்ணுக்குப் புலப்படக் கூடியதல்லவென்றும் சொல்லப்பட்டு வந்தது. மனமென்றுல் என்ன? எண்ணமென்றுல் என்ன? இதற்கு ஆதிகாரணமென்று கூறப்படும் ஆன்மா, கடவுள் என்றுல் என்ன? என்ற இந்த கேள்விகளுக்கு, உள்புகுந்து பார்த்தால்தான் தெரியுமென்று மனநூலாசிரியரும், மதத்தைச் சார்ந்தோரும், மததத்துவநூலாசிரியரும் சொல்லிக் கொண்டு வந்தனர். மனம், சித்தம், எண்ணம், ஆன்மா, கடவுள் இந்த பதங்களால் குறிக்கப்படும் பொருள் இன்னவை என்று உறுதியாக யாரும் விண்டிலார். எனினும் இந்தப் பதங்களைப் பற்றி எழுதியுள்ளனவும், எழுதிவரப்பட்டனவுமான நூல்கள் கோடான கோடியே. இந்த சொற்களின் மேல் கட்டிய கதைகள் என்ன? எழுந்த தர்க்கங்களென்ன? ஆனுல் பகிர்முக (வெளி) விசாரணையில் இந்த பதங்கள் ஒன்றுக்கும் பொருள் இன்னதென்று ஏற்படுவதாகக் காணேம்.

பூதப்பிசாசுகள், இருளன், வீரன், குட்டிச் சாத்தான், முனீசுவரன், நரகம், சிவன், விட்னு, கடவுள், சாத்தான் போன்ற சொற்கள் எந்தப் பொருளையும் குறிக்காதது போல், மனம், எண்ணம், சித்தம், சைதன்யம், சிதாகாசம், கியாபகம், இயற்கை எண்ணம், பரம்பரை எண்ணம் முதலியன கற்பனை வார்த்தைகளென்றே நடத்தை ஆராய்ச்சியால் விளங்குகின்றது. இந்த ஆராய்ச்சியில் "சித்து, சடம்", என்ற பதங்கள் வேற்றுமையை இழந்ததாகக் காணப்படுகிறது. மற்ற மெய்ஞ்ஞான நூல்களிலிருந்து "சித்து" என்ற வார்த்தை விலக்கப்பட்டது போல், நடத்தை நூலிலும் சித்து மனம் எண்ணம் முதலிய வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

நடத்தை நூலாவதென்ன? மனிதனுடைய நடத்தை அல்லது நடக்கையைக் குறித்து பேசும் நூலாகும். நடத்தையைத்தான் நாம் பார்க்கின்றோம். சுய அல்லது இயற்கை அறிவு என்று சொல்லுவதும், பயம், கோபம், அன்பு என்று அழைப்பதும், எண்ணமென்பதும் சகலமும் நடத்தையே. நமது அவயவங்களின் நடத்தையே இந்த நடத்தைகளுக்குக் காரணமாகும். நமது உடலின் அவயவங்களின் வெளியில் உண்டாகும் தூண்டுதலாலோ அல்லது உள்ளே உண்டாகும் தூண்டுதலாலோ அசைவுறுகின்றன. இந்த அசைவுகள் தான் நடத்தையாகத் தோன்றுகின்றன.

பிறந்த குழந்தையை முலைப்பாலுண்ணத் தூண்டுதல் செய்தவுடன், அது சலனிக்க அதாவது அசைய ஆரம்பிக்கிறது, இதைத்தான் பால் உண்ணுகிறதென்று சொல்லுவது, வயிற்றில் ஒன்றும் இல்லாவிட்டால் குடல் அசைந்து தொண்டையைத் தூண்டுகிறது. இந்தத்தூண்டுதலால் தொண்டை சலனிக்கிறது. அதைத்தான் அழுகை என்று வழங்குகின்றோம். இதேமாதிரியாகவே ஈரல், இருதயம் முதலிய அவயங்கள் சலனமுற்றுல், பயமோ, நடுக்கமோ தோன்றுகின்றது. அழும் குழந்தையின் உதட்டை மெதுவாகத் தடவினுலும் அல்லது ஆண் பெண் அவயவத்தைத் தொட்டாலும் அழுகை நின்று முக மலர்ச்சி பெறுகின்றது. குழந்தையைத் தலை

கோகத் தொங்கவிட்டால் நடுக்கமுறும். ஆகையால் பச்சிளங் குழந்தைகள் காட்டும் அழுகையும் கோபமும், பயமும் அதன் அவயவங்களின் செயல்களே இந்த செயல்களை தகுந்த தூண்டுகோலால் அதிகப்படுத்தலாம், அல்லது மாற்றலாம், அல்லது நிறுத்தியும் விடலாம். இந்த ஆராய்ச்சியின்படி இளங்குழந்தைகளை எந்தெந்த மாதிரி நடிக்க வேண்டுமானாலும், அம்மாதிரியே அதன் நடக்கையை மாற்றக்கூடும். குழந்தைகளைத் திருடச் செய்தாலும் செய்யலாம். அல்லது ஞானியாகச் செய்தாலும் செய்யலாம். எல்லாம் பழக்கமே, தொட்டில் பழக்கங்களாகிய பயம், வெட்கம், கோபம், முதலிய வேண்டா நடத்தைகளை மாற்றி, தைர்யம், நாணமின்மை. கோபமின்மை முதலிய வேண்டும் நடத்தைகளைக் காட்டச் செய்யலாம். இதுகாறும், மனிதனுடைய நடத்தைகளுக்கு நேர் காரணங்களாயுள்ள அவயவங்களைக் கவனியாது, வெறுஞ் சொற்களை மாற்ற முயன்று வந்தோம். இந்த மூடப்பழக்கத்தினால் மனிதருடைய நடவடிக்கை இன்றைக்கும் சமூக வாழ்வுக்கு நேர் விரோதமாகவே இருந்து வருகின்றது. இனி இந்த ஆராய்ச்சி பெருகப் பெருக, சமூக வாழ்வுக்கு எந்த நடத்தை வேண்டுமோ அந்த நடத்தைகளையே வரவழைக்க முடியும். இந்த ஆராய்ச்சியால் குலத்திற்குத் தக்கப்படி குணம் என்பது பொய்யாகி விட்டது. எந்தக் குலத்தில் பிறந்தாலும், அந்தக் குழந்தைகளை சமூக வாழ்வுக்கு வேண்டிய நடத்தைகளைக் காட்டவும் செய்யலாமெனப் பெறப்பட்டது. தொட்டில் பழக்கவழக்கங்களை வேண்டியவாறு தூண்டுதல் செய்யும் பட்சத்தில், நடத்தைகளும் வேண்டியவாறு வரும். ஆஸ்திக உலகமாக்கினாலும் ஆக்கலாம், நாஸ்திக உலகமாக்கினாலும ஆக்கலாம். கடவுளர் எண்ணங்களும் அவைகளால் உண்டாகும் பக்தி, பயம், பிரார்த்தனை, வேறுபாடு, வைராக்கியம் முதலிய நடத்தைகளும், தொட்டில் நற்பழக்க மூலமாகவே உலகில் இல்லாமலே செய்து விடலாம். இந்த நடத்தை ஆராய்ச்சியால், இதுகாறும் தெரியாதிருந்த தூண்டு கோல்களால் இனி உலகம் சிக்கிரத்தில் சீர்பெறுமென்பதற்கு ஐயமில்லை.

மனித நடத்தைகளுக்கு மூன்றுவித பழக்கங்கள் உள்வாகத்தெரிகிறது. சித்திரத்திற்குக் கைப்பழக்கமும், எண்ணத்திற்கு நாவின் பழக்கமும், கோபம், தாபம், அன்பு, ஈகைக்கு நமது குடலும் காரணமென்று தெரிகிறது. கை, கால்களால் நடக்கவும், ஓடவும் ஆடவும் அடிக்கவுமான நடத்தைகள் உண்டாகின்றன. இந்த நடத்தைகளை பழக்கத்தினால் செம்மையாக்கலாம். "சித்திரமும் கைப்பழக்கம்" என்றார் பெரியோர். எண்ணத்தையும் நாவின் திறமையால் உண்டாக்கலாம். நாவின், அதாவது நாக்கு, தொண்டை 'பேசும் சதை, மூச்சுப்பை முதலிய பேசுதற்கு வேண்டிய அவயவங்களின் சேட்டையை எண்ணமென்று வழங்குகின்றோம். எண்ணம், ஞாபகம், நினைவு முதலிய நடத்தைகள் யாவும் நமது பேச்சின் பரிணமங்களே. நாம் உரத்துக் கூவும்போது பேசுவதாகவும், நமக்கு நாமே பேசும்போது, எண்ணமிடுவதாகவும் சொல்கின்றோம். இந்த சித்தாந்தத்தின்படி, ஊமை எண்ணுகின்றானா? அல்லது நினைக்கின்றானா? என்று கேட்கலாம். நாம் வார்த்தையால் பேசுவதுபோல் அவனும் சைகையால் பேசுகின்றான். அவனது சைகையே அவனுக்கு நினைவாகும். லாராபிரிஜ்மான் என்ற ஊமைப்பெண் தான் தூங்கும் போது, கையாலும் விரலாலும் சைகை செய்து கொண்டிருந்தாள். இதுவே அவளுக்கு கனவாகும். நாம் எண்ணுகின்றோம் என்பதும், நமது நாக்கு முதலிய அவயவங்களின் நடத்தையே. இந்த அவயவ நடத்தையை, ஏதோ விபரீதமாக எண்ணி, இதை சூட்சுமப் பொருள் என்றும் மனம் என்றும், கடவுள் உருவம் என்றும் வழங்கி வந்தது நமது தொட்டில் பழக்கம் என்று அறியவும்.

கோபம், தாபம், அன்பு, ஈகை முதலிய நடத்தைகள் நமது குடல்களின் அசைவுகளே. "குடல் நடுங்கிற்று" என்று வழங்கும் அனுபவ வார்த்தைகளாலும், பயத்திற்குக் குடலே காரணம் என்று நன்கு விளங்கும். பாம்பைக்கண்டு சிலர் பயப்படுகின்றார்கள், இருளைக்கண்டு சிலர் பயப்படுகின்றார்கள். இந்த நடத்தைகள் தொட்டில் பழக்கங்களே. ஆனால், இந்தப் பழக்கங்களை குடல்களின் நடவடிக்கைகளைக் கொண்டு மாற்றி விடலாம். பயங்கொள்ளிகளைப் பயப்படாமலும் செய்யலாம். இதைச் சோதனை செய்தும் இருக்கிறார்கள். நன்மைகளையே ஒருவன் செய்து வரவேண்டுமானால் அந்தக் காரியத்திற்கு உரிய குடல் பாகங்களைப் பயிற்றுவோமானால் அவன் நல்ல காரியங்களையே செய்து வரக்கூடும். ஒருவன் செய்து வரும் பெரும்பான்மையான காரியங்கள் அவன் இளமையிலிருந்து பழகியபடி செய்கின்றானேயொழிய கர்மத்தாலும் அல்ல, கடவுளாலும் அல்ல என அறிக. ஆதலின் ஒருவனுடைய துர்செய்கைகளுக்கும், நற்செய்கைகளுக்கும் எந்த மக்கள் சமூகத்தில் பழகினானோ அந்த சமூகமே அதற்குக் காரணமாகும்.

இந்த ஆராய்ச்சியில் ஏற்படும் முடிவுகள் என்னவெனில் மனிதன் நடையை சமூகங்களுக்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளலாம், வேண்டிய நடையை அதன் அவயவங்களைக் கொண்டு திருத்திக் கொள்ளலாம் என்பதே. இதனை அறியாது, மனத்தைக் கற்பித்தல் என்றும் பயபக்தியால் நடத்தை சீர்படும் என்றும் சொல்லி வந்ததெல்லாம் வீண் சொற்களே. நமது உடலின் உறுப்புகளை விசாரித்தல், நமது தற்காலக் கடமையாகும். அந்த விசாரணையின் பலனைக் கொண்டு நமது மக்களை வளர்த்தலே சாலச் சிறந்த செயலாகும்.

சோலாவின் வாழ்வில் . . .

எமிலி சோலா! அரசினர் ஊழல்களையும், பிரபுக்களின் அட்டூழியங்களையும் சமூகத்தின் கொடுமைகளையும் அம்பலப்படுத்தி ஏழை பங்காளனான பிரெஞ்சு நாட்டுப் பேனா வீரன்!

வேலை கிடைக்காமல், வருவாய்க்கு வழியில்லாமல், பாரிஸ் நகர வீதிகளில் சுற்றி வந்துகொண்டிருந்த எமிலி சோலாவிற்கு முதன் முதலாக லாரூ என்ற புத்தக வெளியீட்டாரிடம் வேலை கிடைத்தது. மன நிறைவுடன் வேலையை ஏற்றுக்கொண்டு இரவு பகலாக உட்கார்ந்து எழுதுவதிலே ஈடுபட்டார்.

ஆனால் அவருடைய ஊதியம் மிகமிகக் குறைவாக இருந்தது. அவருடைய மனைவியார் பணங் கேட்டு அவரது பணி மனைக்கு வராத நாட்கள் அதிகம் இருக்காது. ஆனால் பணம் கிடைப்பதற்கு மார்க்கம் இல்லை. லாரூ நிலையத்தார் சோலாவின் ஊதியத்தை அதிகரிக்க மறுத்தனர். மேலும் சோலாவின் பேனாமுனையிலிருந்து வெளிப்பட்ட கருத்துக்கள், புகழ்பெற்ற தங்கள் நிலையத்தின் கௌரவத்திற்கு ஏற்றதல்ல என்று கருத முற்பட்டனர். எந்த நேரத்திலும் சோலா வேலையிலிருந்து நீக்கப்படுவார் என்ற நிலைமை ஏற்பட்டது.

ஒருநாள் சோலா புத்தக நிலையத்தில் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, போலீஸ் அதிகாரியிடமிருந்து அனுப்பப்பட்ட ஒருவர் வந்தார்.

"இங்கே யார் எமிலி சோலா?"

"நான்தான்."

"உன்னை நான் எச்சரிக்கை செய்கிறேன்! நீ ஆபத்தை வரவழைத்துக்கொள்கிறாய். உன்னுடைய நூல்களும் கட்டுரைகளும் அறிவாளிகளையும் அரசினரையும் கண்டிக்கின்றன. இதை நீ உடனடியாக நிறுத்திவிடவேண்டும்! புரிகிறதா?"

அந்த போலீஸ் ஒற்றன் வெளியேறினான்: லாரூ உரிமையாளர் கடுங்கோபத்துடன் சோலாவின் முன்வந்து நின்றார்.

"ஆனால்......" என்று ஆரம்பித்தார் சோலா. உரிமையாளர் வெளியே போகுமாறு கைகாட்டினாரே தவிர சோலாவின் வாதத்தைக்கேட்க விரும்பவில்லை.

"சரி! போகிறேன். ஆனால் என் வேலை போய்விட்டதாலேயே நான் எழுதுவதை விட்டுவிடுவேன் என்று எண்ணாதீர்கள்! நான் நேரத்தைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அதுவும் கிடைத்துவிட்டது! இனி பாருங்கள் என் வேலையை! அண்மையிலே நிகழ்ந்ததே 'சுரங்க அழிவு,' அது பற்றி என்ன? யார் குற்றவாளி? பார்க்கலாம்!" வெற்றிப் புன்னகையுடன் கூறிவிட்டு வெளியேறினார் சோலா.

ஏழ்மையில் சிக்கி வறுமையால் வாடிய நேரத்திலும் பணத்திற்காக தனது பேனாவைப் பயன்படுத்தாது எமிலி சோலா கொள்கைவீரனாக நின்று ஏழைபங்காளனானார்.

வான்வெளிப் பயணம்

★

செயற்கைத் திங்கள்களை (Satellites) விட்டு, வான்வெளியை வெற்றி கொள்வதில், அறிவியல் அறிஞர்களில் சிலர் முழுமுயற்சி எடுத்துவருகின்றனர். அமெரிக்கா இந்த முயற்சிக்கு முழுஆதரவு தந்து முன்னணியில் நின்று செயலாற்றிவருகிறது.

1957-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 1-ஆம் நாள் தொடங்கும், 'எல்லா நாடுகளின் உலக இயற்கைப் பொருளாராய்ச்சி ஆண்டின்' ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குச், செயற்கைத் திங்கள்கள் பேருதவிபுரியும் என்று அறிவியல் அறிஞர்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

வான்வெளியைத் துருவி ஆராய்ச்சி செய்வது நெடுங்காலமாகவே அறிவியலறிஞர்களுக்கு விருப்பமாயிருந்து வந்திருக்கிறது. திங்கள் முதலிய கோள்களை எப்படியேனும் எட்டிப் பிடிக்கவேண்டும் என்பது அவர்களது பேராவல். அதற்கான போதிய அறிவியல் வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படாமலிருப்பதாலும், அத்தகைய வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதற்கு அணுகமுடியாத பெருஞ் செலவு ஏற்படுவதாலும் அந்த முயற்சி இன்னமும் வெற்றிபெறுமல் இருந்துவருகிறது. அமெரிக்க அறிவியல் நிதி நிலையமும், அமெரிக்க உள்நாட்டு அறிவியல் கழகமும் சேர்ந்து எடுக்கும் அத்தகைய முயற்சிக்கு அமெரிக்க அரசாங்கமும் தன்னுலியன்ற பொருளுதவியும், ஒத்துழைப்பும் நல்க முன்வந்திருப்பதால், அந்த முயற்சி விரைவில் வெற்றி பெறுவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன.

உலகின் ஈர்ப்பாற்றல் நிலவும் மண்டலத்துக்கு அப்பால் வெளியேற, முதன்முதல் உருவான திட்டங்கள் எல்லாம் பெரிய குண்டுகள் போன்ற "எறிபொருள்களை" எண்ணத்தில் வைத்துக் கொண்டு தீட்டப்பட்டவையாகும். இவை நொடிக்கு சுமார் எழு மைல் விரைவு வீதம் நேரே மேல்நோக்கி எறியப்பட்டால், குறித்த திக்கில் உலகிற்குமேலே அதன் ஈர்ப்பாற்றல் மண்டலத்தைக் கடந்து வெற்றுவெளியில் நுழைந்துவிடும் என்று கருதப்பட்டது. இத்திட்டங்கள் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியடையவில்லை; காரணம் ஆராய்ச்சிக்குப் பெருவாரியான பணம் தேவைப்பட்டது; அவ்வளவு பணத்தையும் முதலீடு செய்ய எந்த நிறுவனத்தாலும் இயலவில்லை. அதுமட்டுமல்லாமல், அது கிளம்பும் போது ஏற்படும் அதிர்ச்சியைஉலகிலுள்ள உயிர்ப்பொருள்கள் தாங்கிக்கொள்ளா என்றும் அறிவியல் அறிஞர்கள் கருதினர்கள். இத்தகைய செயல்முறைத் தொல்லைகளும் பெரும் இடையூறுகளாக இருந்துவரலாயின.

வாண (ராக்கெட்) முறை வளர்ச்சி பெறவே, வான்வெளியை எட்டிப் பிடிக்கும் முறையும் புரட்சிகரமாக மாறலாயிற்று. இதற்கு 1930-ல் அமெரிக்காவில் ஏற்பட்ட 'அமெரிக்க எல்லாக்கோள் கழகம்' என்ற அமெரிக்க வாணக் கழகம் முக்கிய காரணமாக இருந்தது என்னலாம்.

வான்வெளிச் செயற்கைத் திங்கள்கள் எப்படி இயங்க முடியும் என்பதை அறிவது மிகக் கடினமானதல்ல. ஒரு பொருள் எந்த எடையுள்ளதாயினும், எந்த வடிவமானதாயினும் அதனை மணிக்கு சுமார் 1800 மைல் விரைவில் (செங்குத்தாக அல்லாமல்) கிடைநிலையில் நேரே விட்டால், அது ஈர்ப்பாற்றலால் நிலத்தில் விழக்கூடிய போக்கு, வான்வெளியில் பாய்ந்து போய்விட ஏற்படக்கூடிய போக்குக்குச் சரிசமமாயிருக்கும் என்று எளிதில் கணக்குப் போட்டுக் காட்டி விடலாம். அதாவது அத்தகைய பொருள், காற்றினல் அதன் விரைவு குறைக்கப்படாமல் இருக்குமே

யானுல், உலகைச் சுற்றி சுழன்று கொண்டேயிருக்கும். 350 மைல் உயரத்துக்குமேலே காற்றின் எதிர்ப்பு கவனிக்கத்தக்க அளவில் இராது என்பது தெரிந்ததே.

ஆகவே ஒரு செயற்கைத் திங்களை 350 மைலுக்கு மேற்பட்ட ஒரு வட்டத்தில் சுற்றி வரும்படி மணிக்கு சுமார் 18000 மைல் விரைவில் எறிந்தோமானல், என்றும் உலகைச் சுற்றிக் கொண்டேயிருக்கும்; சுமார் $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கு ஒருமுறை அடிவானத்திற்கு மேல் தோன்றிக் கொண்டே இருக்கும். செயற்கைத் திங்களுக்குத் தேவையான விரைவை—அதாவது நொடிக்கு சுமார் 7 மைல் விரைவை—"செட் உந்து முறை" யினல் உற்பத்தி செய்து, விரும்பிய வட்டத்தில் உலகைச்சுற்றி வரும்படி அதனை எறிவதுதான் இப்போது பிரச்சினை. முதல் முதல் அனுப்பப்படும் செற்கைத் திங்கள்கள் தாமே குறிப்பெடுக்கும் தெர்மா மீட்டர்கள், காற்றுப் பாரமானிகள், எலக்ட்ரோ மீட்டர்கள் போன்றவைகளை எடுத்துச்செல்லும். பின்னர் சுண்டெலி, முயல், தவளை போன்ற உயிரினங்கள் அனுப்பப்படும்போது, அவற்றின் நாடித் துடிப்பு, மூச்சு, குருதியழுத்தம் அகியவற்றைப் பார்த்துப் பதிவு செய்யத்தக்க கருவிகளும் இருக்கும். அவை பதிவு செய்தவற்றைத் தாளுகவே ஒலிபரப்பித் தெரிவிக்க அவற்றினுள் ரேடியோ டிரான்சி மீட்டரும் இருக்கும்.

செயற்கைத் திங்கள்களையும் கருவிகளையும் உருவாக்குவதற்கென்றே துண்டாக அமெரிக்கப் பண்டாரசாலை (கசாஞ) உரிய வல்லுநர்களிடம் ஒரு பெருந் தொகையை ஒப்படைத்திருக்கிறது. கட்டுமான வேலைக்குப் பொதுப்படப் பொறுப்பேற்றிருக்கிறது அமெரிக்கக் கடற்படையின் ஆராய்ச்சி ஆய்வுக்கூடம்.

செயற்கை நிலவுகளை உருவாக்குவதில் சோவியத் உருசியா, இத்தாலி சப்பான் போன்ற நாடுகளும் தனித்தனியே முயன்று கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் எல்லாக் கோள்கழகங்கள் இருப்பதுபோல், இந்தியத் துணைக்கண்டத்திலும் ஒரு கழகத்தைத் தோற்றுவிக்கும் எண்ணம் இந்தியப்பேரரசரிடம் இருந்து வருவதாகத் தெரிகிறது. அந்தஎண்ணம் விரைவில் செயலாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வானத்தில் புதிய திங்கள்களை ஏறபடுத்த முயற்சியும், திங்கள் மண்டலத்தை அடையும் முயற்சியும் ஆராய்ச்சியில் இருந்துவரும் வான்வெளிப் பயணத்தின்மூலம் விரைவில் வெற்றி பெறும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்கியிருக்கின்றன.

உலகின் வரலாறு

★

உலகின் பிறப்பிலிருந்து இதுவரை வளர்ந்து வந்துள்ள காலத்தை, ஒரு ஆண்டு என்று கற்பனையாக நாம் கணக்கிட்டுக் கொண்டால், இந்தக்கால அளவின்படி முதல் எட்டுத் திங்கள்கள் உயிரினம் எதுவுமே தோன்றுமல் கழித்த காலமாகும். பின்னுல் தொடர்ந்துவரும் இரண்டு திங்கள்கள், கண்ணுக்குத் தெரியா மிகச்சிறிய கிருமிகளிலிருந்து சிறிய மீன் வரையிலுள்ள உயிரினங்கள் தோன்றிய காலமாகும். டிசம்பர் திங்கள் இரண்டாவது வாரம் வரையில் குட்டி போட்டுப் பால் கொடுக்கும் உயிரினங்கள் தோன்றியனவாகக் கூறமுடியாது. நாம் இப்பொழுது காணும் உருவ அமைப்போடு கூடிய மனிதஇனம் டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் இரவு 11-45 மணிக்குத் தோன்றியதாகக் கொள்ளவேண்டும். மனிதனின் எழுதிவைக்கப்பட்ட வரலாற்றின் காலம், டிசம்பர் 31-ஆம் நாள் இரவு 12 மணி முடியும்போது, கடிகாரத்தின் கடைசி 60 நொடிகளில் (Seconds) அதாவது கடைசி ஒரு நிமிடத்தில் உருவானதாகும்.

—ரிச்சர்டு காரிங்டன்
(Richard Carrington)

1079

மன்னிப்பு

இரா. செம்பியன்

"அடேய், அண்ணாமலை!"

"வாடா, கண்ணப்பா!"

"இருட்டில் ஏண்டா உட்கார்ந்திருக்கிறாய்?"

"பொழுது போனது தெரியாமல் இருக்கிறேன். உனக்கு ஏண்டா இவ்வளவு நேரம்?".

இந்த உரையாடல் நிகழ்ந்தது இரு விளையாட்டுச் சிறுவர்களுக்குள் அல்ல, பழுத்த இரண்டு கிழவர்கள் பேசிக்கொண்டார்கள். அண்ணாமலைக்கு வயது அறுபது இருக்கும். அவர் அரசாங்க உத்தியோகத்தில் உயர்ந்த பதவிகளை ஏற்று, கடைசியாக ஓய்வு பெறும் பொழுது மாதம் இரண்டாயிரம் வருமானத்தில் இருந்தவர். நல்ல நிலையில் இருந்தவர் என்பதற்கு அந்த வீடு, அலங்கரிக்கப்பட்ட அறை, அவர் உட்கார்ந்திருந்த நாற்காலி அடையாளமாக இருந்தன. அவர் குடித்துக் கொண்டிருந்த சுருட்டின் நாற்றம் அறை பூராவும் பரவியிருந்தது. அவருக்கு எதிரில் வந்து உட்கார்ந்த கண்ணுசாமிக்கு அவருடைய வயதுதான் இருக்கும். ஆனால் அவர் அண்ணாமலையை விடத் தோற்றத்தில் வயது குறைவாகவே காணப்பட்டார். உடையும், நடையும், நிறுத்திப் பேசுவதும், உற்றுப் பார்ப்பதும் அவர் வாழ்க்கையில் எவ்வளவு கட்டுப்பாட்டுடன் இருந்தவர் என்பதைக் காட்டின. இரண்டு ஆண்டுகளுக்கு முன் வரை. மாநிலக் கல்லூரியில் சென்று பேராசிரியர் கண்ணுசாமி என்று கேட்டிருந்தால் புதிய மாணவன்கூட மாடியில் இருக்கும் அறையைச் சற்று நடுக்கத்துடன் சுட்டிக் காட்டியிருப்பான்.

பேராசிரியர் கண்ணுசர்மி தம் வாழ்வின் பெரும்பகுதியை கல்லூரி ஆய்வுச்சாலையில் கழித்திருப்பார் என்றே சொல்லலாம். அண்ணாமலைக்குப் பேரன் பேத்திகள் கூட இருக்கின்றனர். ஆனால் கண்ணுசாமி திருமணம் ஆகாதவராக வாழ்ந்தார். காலையில் கல்லூரிக்குச் சென்றால், மாலைதான் திரும்புவார். எங்கும் பரபரப்புடன், நேரத்தை வீணாக்காமல் காரியமாற்றும் கண்ணுசாமி, அண்ணாமலை வீட்டில் மட்டும் அமைதியுடன் நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருப்பார். வீட்டுக் குழந்தைகள் அவருடன் விளையாடும். கல்லூரியில் கடுகடுத்த முகத்துடன் காணப்படும் பேராசிரியர், அங்கு சத்தமிட்டுச் சிரித்துக் குழந்தைகளுடன் விளையாடுவதைப் பார்த்து மாணவர்கள் ஆச்சரியமடைவார்கள்.

சுருட்டுப் புகையை விட்டபடி அண்ணாமலை கேட்டார் "நீ ஏன் இன்று பொங்கல் சாப்பிட வரவில்லை."

"பொங்கலா?"

"இன்றைக்கு பொங்கல் நாள்!"

பொங்கல் திருநாள் கூட, கண்ணுசாமிக்கு மறந்துவிட்டது. சிறிது நேரம் தனது வெள்ளிய தலைமயிரை ஒதுக்கிவிட்டபடி அவர் உட்கார்ந்திருந்தார். "முப்பத்தைந்து பொங்கல்கள், இந்த வீட்டில் நான் கொண்டாடியிருக்கிறேன். எவ்வளவுதான் வேலைகளிருந்தபோதிலும் பொங்கலன்று காலை இங்கு வந்துவிடுவேன். அன்று பூராவும் வீட்டை அலங்கரிப்பதும், ஒழுங்கு படுத்துவதிலும் பொழுது போகும். மாலையில் வெளியில் உட்கார்ந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்போம். பாட்டுகள் பாடுவோம்! போன பொங்கல் கூட குழந்தைகள் ஆடிப்பாடி வீட்டைக் குதுகலப் படுத்தின. ஆனால் இந்தப் பொங்கல் உன் மனைவி..."

அண்ணமலை பெருமூச்செறிந்தார். "சென்ற ஆண்டு மரகதம் இருந்தாள். பொங்கலும் இருந்தது. அவள் போய்விட்டாள். வீட்டில் தங்கியிருந்த மகிழ்ச்சியும் போய்விட்டது."

கண்ணுசாமி கண்ணுடியைக் கழற்றி கண்களைத் துடைத்துக் கொண்டார். "சென்ற ஆண்டு நன்ருக ஞாபகத்திற்கு வருகிறது. பொங்கலன்று இதே நேரம்! தோட்டத்தில் நாம் உட்கார்ந்திருந்தோம். மணல் திட்டில் உன்னுடைய மகள் தன் மகவுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள். மரத்தடியில் உட்கார்ந்து, வழக்கம்போல் நீ சுருட்டுக் குடித்துக் கொண்டிருந்தாய். நானும் மரகதமும் வானத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நட்சத்திரங்களை ஒவ்வொன்ருகக் காட்டி நான் விளக்கிக்கொண்டிருந்தேன். நட்சத்திர அமைப்புகளைப் பற்றி நான் ஒரு கட்டுரை எழுத அப்பொழுது இருந்தேன். மரகதம் போனதும் கட்டுரை எழுதவேண்டுமென்ற எண்ணமும் போய்விட்டது."

அண்ணமலை சுருட்டைத் தட்டிவிட்டார். அதிலிருந்த சாம்பல் கீழே விழுந்தது. "மரகதம் இருந்திருந்தால் இதை அனுமதித்திருக்க மாட்டாள். வீட்டை ஒழுங்காகவும், தூய்மையாகவும் வைப்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்தாள். நான் வேலையிலிருந்தபொழுதும், ஓய்வு பெற்ற பின்னும், அவளில்லாமல் என்னுல் எதுவும் செய்ய முடிவதில்லை. சிறந்த மனைவியாக இருந்தாள். என் குறிப்பறிந்து அவள் நடந்து வந்தாள். அவள் என்னை அறிந்து வைத்திருந்ததைப்போல, அவளை என்னுல் அறிந்து கொள்ள முடியவில்லை."

"அவளை நீ என்றுமே அறிந்துகொண்டிருக்க முடியாது." என்று கண்ணுசாமி முணுமுணுத்துக்கொண்டு, வெளியில் பார்த்தார். இருண்ட வானத்தில் நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன.

"அண்ணமலை! உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும். நீண்ட காலமாகச் சொல்ல முடியாமல் மறைத்து வந்தேன். அது என் இருதயத்தை அரித்தபடி இருக்கிறது, இன்று அதைச் சொல்லி விடுகிறேன்." கண்ணுசாமியின் குரல் கரகரத்தது.

அண்ணமலை சுருட்டை விரல்களிடை உருட்டிக்கொண்டார். "அப்படியென்ன இரகசியம்?"

"முப்பத்தைந்து ஆண்டுகளாக, அந்த இரகசியத்தைச் சுமந்தேன். இன்று இறக்கி விடுகிறேன்."

"முகவுரை பலமாக இருக்கிறதே!" அண்ணமலை சிரித்துக்கொண்டார்.

"வேடிக்கை செய்யாதே! மிக வேதனை தரும் ,செய்தி இந்த இரகசியம் என்னையும் மரகதத்தையும் பொறுத்தது"

அண்ணமலை திடுக்கிட்டு உட்கார்ந்தார், அவர் கையிலிருந்த சுருட்டு கீழே விழுந்தது. "என்ன? என் மனைவி எனக்குத் துரோகம் செய்தாளா?"

"அண்ணமலை! அப்படிச் சொல்லாதே! உன் மனைவி உத்தமி! வானத்து நடு நட்சத்திரம் அகன்ருலும், அகலாத நெறியுடையாள்! நாம்தான் துரோகிகள். நான் சொல்வதைக் கேள்! முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நீ திருமணமாகி, இங்கு வந்தாய்!"

"முதல் தடவையாக இந்த வீட்டுக்கு வந்தாய்!"

"ஆமாம்! ஆனுல் அதற்கு முன் மரகதத்தை—அவள் திருமணத்துக்கு முன் பார்த்திருக்கிறேன். அவள் என்னுடைய கிராமத்துக்குப் பக்கத்தில்தான் இருந்தாள். அவளை நான் ஓரிரு தடவை பார்த்தபோதிலும், அவள் என்னைப் பார்த்திருக்க முடியாது, நான் அந்த அளவு உயர்ந்தவனல்ல. படித்துவிட்டு, வேலைக்கு அலைந்தவன்! அவளை மறந்தும் விட்டேன். மீண்டும் உன் வீட்டில், உன் மனைவியாக அவளைப் பார்த்தேன்! உண்மையிலேயே பண்பில உயர்ந்தவளாக, மாதர் குலத்தின் மாணிக்கமாக, மரகதம் இருந்தாள்! வானத்தை அண்ணந்து பார்த்து "அதோ! ஒளிவிடும் நட்சத்திரம்!" என்று கூறுவதைப் போல, இந்த வீட்டிற்கு வரும்பொழுதும், போகும்பொழுதும் "அதோ! அந்தப் பெண்!" என்று கூறிக்கொள்வேன். களங்கம் என்றும் என் உள்ளத்தில் காணப்படவில்லை. களங்கத்துக்கு, உலகின் காரிருளுக்கு அப்பாற்பட்ட நட்சத்திரமாகவே அவள் இருந்தாள். ஆனுல் நீ, அவளுடைய அருமை தெரியாதவனுக, ஊர் சுற்றிக்கொண்டிருந்தாய், மோகனு என்ற ஆட்டக்காரி பக்கத்துத் தெருவில் இருந்தாள்."

"உம்!" என்று அண்ணமலை ஒரு சுருட்டைப் பற்ற வைத்தார்.

"நீ மோகனுவின் 'வலையில் வீழ்ந்து கிடப்பது சிறுகச் சிறுகத் தெரியவந்தது. ஆனுல்

உன் மனைவி அதைப்பற்றி எதுவும் வெளிக் காட்டிக்கொள்ளவில்லை. கல்லூரியை விட்டு நான் வரும்பொழுது நீ வெளியில் போயிருப் பாய். நான் ஒப்புக்கு விசாரித்துவிட்டுப் போய்விடுவேன். ஆனால் அன்று, பொங்கல் திருநாள் — முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்! நான் வந்தபொழுது மரகதம்மட்டும் தனியாகத் தோட்டத்திலுள்ள பலகைமீது தனியாக உட்கார்ந்திருந்தாள். நான் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தேன். அவள் அமைதியற்று விளங்கினாள். நீ வருவதாகக் காணோம். அடிக்கடி வெளியே பார்த்தபடி அவள் என்னுடன் பேசிக்கொண் டிருந்தாள். ஒரு மணி நேரம் ஆனது. நீ அப்பொழுதும் வரவில்லை. எங்களுக்கும் பேசுவதற்கு வேறு இல்லை. நான் பேசாமல் அண்ணாந்து பார்த்த படி உட்கார்ந்தேன். "அந்த நட்சத்திரம் என்ன?" என்று அவள் ஆரம்பித்தாள். அவள் ஏதாவது பேச்சு இருக்க வேண்டு மென்பதற்காகக் கேட்டிருக்க வேண்டும். நான் முட்டாள். நான் படித்துத் தெரிந்தவற்றை யெல்லாம் கொட்டியளக்க ஆரம்பித்தேன். அவள் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம், நான் சொல்வதை அவள் கவனிக்கவில்லை என்று எனக்குத் தோன்றியது. பேச்சை நிறுத்தி, தலையைத் தாழ்த்திப் பார்த்தேன். அவள் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். காரணம் எனக் குத் தெரியாமலில்லை. அவளை அந்த சோக நிலைக்கு ஆளாக்கிய உன்மீது எனக்கு அடங் காக் கோபம் உண்டானது. எப்படியும் மோசக் காரி ஒருத்தியிடம் சிக்கியிருக்கும் உன்னைப் பிரித்து, வீட்டுக்கு கொண்டுவந்து விடுவது என்ற உறுதியுடன் நான் எழுந்தேன். மரக தத்தின் கண்ணீரைத் துடைக்க எதைவேண் டுமானாலும் அப்பொழுது, நான் செய்யத் தயங்கியிருக்க மாட்டேன்.

"எங்கே போகிறீர்கள்?" என்று நடுக்கத் துடன் அவள் கேட்டாள்.

"அண்ணாமலையைப்போய் அழைத்து வரு கிறேன்."

"நீயும் போய்விடாதே, என்னைத் தனியாக விட்டு!" அவள் நாக்குழறினாள், என் இதயம் குமுறியது.

நான் உட்கார்ந்தேன். அதற்குமுன் "நீ" என்று மரகதம் என்னை அழைத்ததில்லை. அவள் என் நாற்காலியின் கைப்பிடியின் மீது சாய்ந்தவண்ணம் அழுதாள், வேதனை மற் றோர்புறம் அதற்குமுன் நான் உணராத புதுமை! அதுவரை அவ்வளவு அருகில் எந்தப் பெண்ணும் நின்றதில்லை—நான் நின்ற தில்லை. அவள் கூந்தலில் முடித்திருந்த மலர் அவிழ்ந்து புரண்டது. மலரின் மணம்—மங்கை யின் அருகாமை என் உள்ளத்தை நடுக்க முறச் செய்தன, நான் என்னைக் கட்டுப்படுத் திக்கொண்டு ஏதேதோ சமாதானப்படுத் தச் சொன்னேன். அதற்குள் நீ வந்தாய். மரகதம் எழுந்து வீட்டினுள் சென்று விட்டாள்.

கலவரத்துடன் இருந்த என்னை நீ சரியாகக் கவனிக்கவில்லை. உன் முகத்தில் மோகச்சாயல் இன்னும் கலையாதிருந்தது. நான் எழுந்து போய்விட்டேன்.

அன்றிலிருந்து என் மனத்தில், அலை மோதியபடி இருந்தது. மரகதம் வானத்தில் ஒளிவிட்ட நட்சத்திரமாகவல்ல, வையத்தில் நடமாடும்—என் அருகே கண்கலங்க, கூந்தல் சாய, மலர் அவிழ, மணம் வீச இருக்கும் மங்கையாக மாறினாள். என்மீது எனக்கே கோபம் உண்டானது. துரோகி, பாவி, பழி காரன் என்று என்னை நான் திட்டிக்கொண் டேன். எண்ணத்தில் மாசு ஏற்படக்கூடாது எனப் போராடினேன். மோகனாவிடமிருந்து உன்னைப் பிரித்து விடுவது எனத் திட்ட மிட்டேன். நான் அதுவரைச்சேர்த்து வைத் திருந்த பணம் உதவியாக வந்தது."

அண்ணாமலை இருமிக் கொண்டார். "மோக னாவை வெளியூர் அனுப்பியது நீதானா? போகும்பொழுது, மிகச் சோகத்துடன் அவள் கடிதம் எழுதினாளே!"

"பணத்தைக் கொடுத்து, கடிதத்தை எழு தும்படிச் சொன்னதும் நான்தான். மோகனா வேற்றூர் சென்றாள். நீ வீடு திரும்பினாய். ஓரளவு நான் அமைதியடைந்தேன். ஆனாலும் உன் வீட்டுப்பக்கம் நான் அதிகம் வருவ தில்லை. கல்லூரியில், ஆய்வுச்சாலையில் என் நேரத்தைப் போக்கினேன். இடைவிடாத உழைப்பு! என்னை மறந்துவிட முயன்றேன்.

அடுத்த பொங்கல் வந்தது. நான் உங்கள் வீட்டுக்கு வந்திருந்தேன். இதே நேரம்! தோட்டத்தில் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். நீ உள்ளே படுத்துத் தூங்கிக்கொண்டிருந் தாய். மரகதம் மகிழ்ச்சியுடனிருந்தாள். அவள் இதழ்களில் மெல்லிய பாட்டு தவழ்ந்து கொண்டிருந்தது. நான் பலகையில் உட்கார்ந் திருந்தேன். என் எதிரில் இருந்த பலகை யில் அவள் இருந்தாள். திடீரென்று முதல் பொங்கல்—அந்த இடத்தில் நாங்கள் இருந்

தது—என் ஞாபகத்துக்கு வந்தது. அவளுக்கும் ஞாபகத்துக்கு வந்திருக்க வேண்டும். ஒருவரையொருவர் பார்த்தோம். அவள் புன்முறுவலுடன், "அதோ, அந்த நட்சத்திரங்கள்" என்று என்னைப் பார்த்துக் கேட்டாள். நான் மெல்லச் சொல்ல ஆரம்பித்தேன். அடிக்கடி அவள் கண்கள் என் முகத்தின்மீது வட்டமிட்டன. அவைகளே நட்சத்திரங்களைப் போல இருந்தன. நான் பேசுவதை நிறுத்தி, அவளைப் பார்த்தேன். மறுகணம் அவள் நாற்காலியைப் பிடித்து, மண்டியிட்டுக் கிடந்தேன். நான் காதலித்தேன், ஏதேதோ உளறினேன்!

இரண்டு மூன்று வினாடிகள் அசைவற்றுக் கிடந்தேன். அமைதி நிலவியது. அவளுடைய மெல்லிய விரல்கள் தலைமயிரை ஒழுங்கு படுத்தின. இனிய குரல் என் காதருகே சொல்லியது: "நண்பரே! உறுதியுடனிருங்கள், ஆமாம் உறுதி வேண்டும்! நம்பிக்கையுடன் வீட்டினுள் உறங்கிக் கொண்டிருக்கும் அவருக்குத் துரோகம் செய்யாதீர்கள்!" பித்துப் பிடித்தவனைப் போல நான் எழுந்து உட்கார்ந்தேன். நீ உறக்கங்கலைந்து கண்ணைக் கசக்கிக்கொண்டு வெளியில் வந்து நின்றாய். என் மனதில் மூண்ட புயல் திடீரென்று அடங்கியது. உன் மனைவி மீண்டும் ஒரு நட்சத்திரமாக, மனப்புயலுக்கும் உலகத்தின் களங்கத்திற்கும் அப்பாற்பட்ட நட்சத்திரமாக என் உள்ளத்தில் உயர்ந்தாள்.

அன்றிலிருந்து நான் அமைதியடைந்தேன். அவள் என்னைப் புறக்கணித்தது சரியென்று பட்டது. ஆனால் வேறொரு பெண்ணைத் திருமணஞ் செய்துகொள்வது என்ற எண்ணமே எனக்கு உண்டாகவில்லை. ஆண்டுகள் கடந்தன. நாம் மூவரும் வயதானவர்களானோம். உன் வீட்டில் மூன்று குழந்தைகள் வளர்ந்து, பெரியவர்களாகிப் பேரன்மார்கள் கூடத் தவழ ஆரம்பித்தனர். நான் அவளைக் காதலித்ததை மாற்றமுடியவில்லை. ஆனால் நான் கொண்ட காதல் உறுதியான வகையில் இருந்தது, நட்சத்திரத்தைப் பார்த்து மகிழ்வதைப்போல, அவளைப் பார்த்து நான் மகிழ்ந்தேன். ஒரு நாள், ஒரு கணம் நான் நினைத்த துரோகத்தை அவள் மறந்துவிட்டாளென்றே சொல்ல வேண்டும். முன் போல அதிகப் பாசத்துடன் அவள் பேசுவாள். நானும் மகிழ்ச்சியுடன் பதிலளிப்பேன். நீண்ட நேரம் நாங்கள் தோட்டத்தில் உட்கார்ந்து பேசுவதைப் பார்த்து நீ கூட அடிக்கடி கேலி செய்வாய். என் காதல் அவள் தந்த புனிதமான நட்பைப் பெற்றுத் திருப்தியடைந்தது. குடும்பத்தில் ஒருவராக என்னைப் பாவித்து, அவள் என்னைப்பரிவுடன் பாதுகாத்து வந்தாள். போன பொங்கலன்று கூட, சிறிது நேரங்கழித்து வந்ததற்கு எவ்வளவு அன்புடன் அவள் கோபித்துக்கொண்டாள். இந்தப் பொங்கல் அவள் இல்லை. யாருக்குத் தெரியும், அடுத்தப் பொங்கலுக்குள் நாம்கூட இருக்க மாட்டோம்! மரகதம்! அவள் ஒரு தூய மரகதமாகவே இருந்தாள்! ஆனால், முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன், ஒருநாள், ஒருகணம் நான் உனக்குத் துரோகம் செய்ய நினைத்தேன். என்னை மன்னித்து விடு!"

கண்ணுசாமி தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அண்ணாமலை கரைந்து போன சுருட்டைக் கீழே வைத்தார். "அதெல்லாம் ஒன்றுமில்லை. இரகசியம் என்று இப்பொழுது நீ சொல்லியது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே எனக்குத் தெரியும். மரகதம் அன்று இரவு சொன்னாள். நீ எனக்குச் சொன்னதை விடப் பெரிய இரகசியம் ஒன்றை நான் உனக்குச் சொல்லுகிறேன். மோகனுபோன்ற மற்றப் பெண்களைச்சுற்றி நான் ஏன் அலைந்தேன் தெரியுமா? மரகதத்தின் உள்ளத்தில் ஒரே ஒரு காதல்தான் இடம் பெற முடியும். இடம் பெற்றுவிட்டது என்பதை நான் தெரிந்து கொண்டேன். அவ்வளவுதான்! என்னை அவள் மணந்து கொள்வதற்கு முன்பே அவள் உள்ளத்தில் நீ இடம் பெற்றுவிட்டாய்! அவள் தூய்மையானவள், எனக்குத் துரோகம் செய்யவில்லை! அமைதியுடன், உறுதியுடன் வாழ்ந்தாள்!"

அண்ணாமலை பேசாமல் உட்கார்ந்திருந்தார். நிலவிய அமைதியின் மத்தியில் கடியாரத்தின் எட்டு மணியோசைகள் விழுந்தன. கண்ணுசாமி மங்கிய கண்களுடன் வெளியில் பார்த்தார். இருண்ட அடிவானத்தின்மேல், ஒளிமிக்க நட்சத்திரம் தொங்கிக்கொண்டிருந்தது.

[சேர்மன் சூடர்மான் என்ற சிறந்த சேர்மன் கதாசிரியர் கதையொன்றைத் தழுவியது]

இரவிலே தங்க என்ன குறை?

[இரா. நெடுஞ்செழியன்]

அவள் வாழும் ஊர், கடற்கரையிடத்தை அடுத்த சிற்றூர். கடற்கரையிடத்தில் உப்பங்கழிகள் நிரம்பிக் காணப்படுகின்றன. உப்பங்கழிகளில் பரந்து பூத்துக் குலுங்கிக் கிடக்கும் நெய்தல் மலர்கள், அக்கடற்கரையிடத்திற்கே தனி அழகைக் கொடுக்கின்றன.

உப்பங்கழிகளில் உலாவும் இருல்மீனையும், சுருமீனையும் தின்றுமகிழ வெள்ளிய நாரைகள் கூட்டங் கூட்டமாக வந்து தங்குவதும், பிறகு அவைகள் சிறகை வீசிக்கொண்டு உப்புக்குவியல்களின்மேல் செஞ்ஞாயிறு சென்று வீழும் மாலை நேரத்தில் பறந்து செல்வதும், பின்னர் கரிய கிளைகளையுடைய பெரிய புன்னை மரங்களிலே அவையெல்லாம் திரள்திரளாகச் சென்று அடைவதும், கடலலைகள் முழவு போல் ஒலித்துக் கொண்டு பொங்கி எழுவதும், அவை உடைந்து வீழ்வதும் காண்பதற்கு இனிய காட்சிகளாக இருந்து வருகின்றன.

இத்தகைய இயற்கைச் சூழ்நிலைகளிடையே தோகைவிரித்தாடும் மயிலென அவள் நடமாடி வருகிறாள். அவளது அழகும், சாயலும் அந்தக் கடற்கரையிடத்துக்கே பொலிவையும், பெருமையையும் ஊட்டுகின்றன என்று கூறினால் அது மிகையாகாது. அவள் தன் தோழியை, நாள்தோறும், மாலைப் பொழுதில், உடன் அழைத்துக் கொண்டு கடற்கரையில் உலாவுவதும், இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வதும் வழக்கம். அவளுடைய நடமாட்டத்தைக் கட்டிளங்காளை ஒருவன் கண்டுவிடுகிறான். தன் காதல் வலையை மெல்ல மெல்ல அவள் மீது வீசுகிறான். அவளும் அவன் மீது காதல் மயக்கங் கொண்டு, அவன் வீசிய காதல் வலையில் வீழ்கிறாள். இருவரும் களவொழுக்கக் காதலர்களாக பகற்குறியிடங்களில் அவர்கள் இருவரும் கூடுவதும், பிரிவதும் ஆனமுறையில் களவொழுக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். தோழி, தலைவிக்கு உடந்தையாக இருந்து களவொழுக்கம் இனிய முறையில் நடந்தேறுவதற்கான உதவிகளை அவ்வப்போது செய்து வருகிறாள்.

உற்றார்க்கும் உறவினர்க்கும் அஞ்சி அஞ்சி வாழும் களவொழுக்க வாழ்வை நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து கடைப்பிடிக்க தலைவிக்கு விருப்பமில்லை. விரைவில் திருமணத்தை முடித்துக்கொண்டால், இல்லற வாழ்வை யாருக்கும் அஞ்சாமல் இனியமுறையில் நடத்திச் செல்லலாமே என்று தலைவி எண்ணுகிறாள். தலைவன் திருமணத்தை ஒத்திப் போடுவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறான். களவொழுக்க இன்பமே அவனுக்கு நிகரற்ற இன்பமாகப்படுகிறது.

தலைவியின் வருத்தத்தையும், விருப்பத்தையும் தாமாவது தலைவனிடம் வற்புறுத்திக் கூறுவோம் என்ற முடிவுக்கு தோழி வருகிறாள். ஒருநாள், தலைவன், பகற்குறியிடத்திற்கு வந்து தலைவியைக் கண்டுவிட்டுப் பிரிந்து செல்லும் போது, தோழி அவன் முன்னால் சென்று வழிமறித்து நிற்கிறாள். என்றுமில்லாத வகையில் தோழி வழிமறித்து நிற்பதைக்கண்ட தலைவன் திடுக்கிட்டுத் திகைத்துப் போகிறான்.

தலைவன் : "ஏன்? என்ன வேண்டும்?"

தோழி : "ஒன்றுமில்லை! ஒரு செய்தி தங்களிடம் சொல்ல வேண்டும்."

தலைவன் : "என்ன செய்தி?"

தோழி : "எவ்வளவு நாட்களுக்குத்தான் தாங்கள் இப்படி வந்துகொண்டும் போய்க் கொண்டும் இருப்பது?"

தலைவன் : "நீ என்ன சொல்லுகிறாய் என்பதே எனக்குப் புரியவில்லையே? என்மீது உனக்கு என்ன ஐயம் ஏற்பட்டது?"

தோழி : "நீங்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இதுநாள் வரையில் இருக்கிறீர்

களே ஒழிய, இங்கேயே தங்குவதற்கான ஏற்பாடு எதனையும் செய்யக்காணோம் என்கிறேன்!''

தலைவன்: "இங்கேயே தங்குவதற்கு எனக்கு விருப்பந்தான்! தலைவி விரும்புகிருளா? என்பதுதானே கேள்வி!''

தோழி: "இங்கேயே என்ருல் இந்தக் குறியிடத்தைக் குறிப்பிடுகிறேன் என்று தாங்கள் கருதாதீர்கள். இங்கேயே என்னும்போது இங்கேயுள்ள தலைவியின் இல்லத்தைத்தான குறிப்பிடுகிறேன்.''

தலைவன்: "தலைவியின் இல்லத்தில் வந்து தங்கியிருக்க எனக்குப் பெரு விருப்பந்தான். ஆனல் அவளது தாய்தந்தையரும் தமையன்மார்களும் அவளையும் சினந்து கொளவார்கள, என்னையும் அடித்துத் துரத்துவார்களே!''

தோழி: "நீங்களிருவரும் களவொழுக்கம் நடத்திக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டுவிட்டால்தான் அவளைச் சினந்துகொள்ளவும், உங்களை அடித்துத் துரத்தவும் செய்வார்கள். நீங்கள் முறைப்படி அவளைத் திருமணம் செய்துகொள்ள முன்வந்தால், உங்களுக்கு ஏன் அவர்கள் அவ்விதத் தொல்லைகளைக் கொடுக்கப் போகிருர்கள்?''

தலைவன்: "அவர்களுக்குத் தெரியாமல் நான் திருமணம் செய்துகொண்டால், அப்பொழுதும் என்னைச் சினந்து கொள்ளத்தானே செய்வார்?''

தோழி: "அவர்களுக்குத் தெரியாமல் நீங்கள் திருமணம் செய்துகொள்ளவேண்டிய இன்றியமையாமை என்ன இருக்கிறது? தலைவியின் தாய் தந்தையர்களைத் தாங்களே நேரில்கண்டு முறைப்படி அவளைத் திருமணம் செய்துகொள்ளும் விருப்பத்தை வெளியிட்டால், அவர்கள் தங்களுடைய அறிவு, ஆற்றல், பண்பு ஆகியவற்றையும் குடிச்சிறப்பையும் கருதி அவளைத் தங்களுக்கே திருமணம் செய்து வைப்பார்கள்.''

தலைவன்: "இந்தக் களவொழுக்கமே எனக்கு மிக்க மகிழ்ச்சியையும், இன்பத்தையும் தந்துகொண்டிருக்கிறது. திருமணத்தைச் சிறிது நாட்களுக்கு ஒத்திப்போட்டால் என்ன என்று கருதுகிறேன்.''

தோழி: "நீங்கள் நாள்தோறும் பகற்பொழுதில் வந்துவிட்டு இரவு நேரத்தில் மீளும் போதெல்லாம் நானும் தலைவியும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பவர்கள் போல் இருக்க வேண்டியிருக்கிறது.''

தலைவன்: "உங்களுக்கு ஏன் அப்படிப் பட்ட திகில் ஏற்படவேண்டும்?''

தோழி: "ஆள்நடமாட்டமில்லாத தனி வழியே தாங்கள் இரவு நேரத்தில் செல்லும் போது, விலங்குகளாலும், ஆறலைகள்வர்களாலும் தங்களுக்கு என்ன இடையூறு ஏற்பட்டதோ என்று எண்ணித் தவித்துக் கொண்டிருக்க நேரிடுகிறது. தாங்கள் உப்பங்கழிகளைக் கடந்து செல்லும்போது சுருமீன்கள் தம் கொம்புகளால் தங்களைக் கொன்று விடவும்கூடும். மேலும் நீங்கள் தலைவியோடு களவொழுக்கத் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தலைவியின் தந்தையும் தமையனும் அறிந்து கொண்டு விடுவார்களேயாளுல், தாங்கள் வழியே நடந்து போகும்போது, அவர்கள் சினங்கொண்டு தங்களைத் தாக்கி ஊறு இழைப்பார்கள் என்றும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. எனவேதான் திருமணத்தை செய்துகொள்ள முன்வர வேண்டுகிறேன்.''

தலைவன்: "திருமணத்தைப்பற்றித் தலைவி தெளிவாக வற்புறுத்திக் கூறவில்லையே!

தோழி: "அவள் எப்படி நேரிடையாக வற்புறுத்திக் கூறுவாள்? நாணம் வெளிப்படையாகக்கூற அவளை விடுமோ? அவள் மறைமுகமாக உணர்த்தி வந்ததையெல்லாம் தாங்கள்தான் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். அவள் கூடத் தங்களுக்குக் கூற வேண்டிய தேவையில்லையே. தாங்கள் அன்ருடம் காணும் மாலைப்போது இயற்கைக் காட்சிகளே தங்களுக்கு எவ்வளவோ அறிவுரைகள் கூறியிருக்குமே! நாரைகள் நாள்தோறும் புன்னைமரக்கிளைகளில் சென்று தங்குவது, தாங்கள் தலைவியோடு இல்லறத்தில் தங்க வேண்டும் என்பதையும், உப்பங்கழிகளில் ஆண்சுருவும், பெண்சுருவும் சேர்ந்து இயங்குவது, தாங்களும் தலைவியும் ஒன்ருக இணைந்திருக்கவேண்டும் என்பதையும் உணர்த்துவனவாகுமே! தலைவியோடு சேர்ந்திருந்து இல்லறம் நடத்துவதில் 'தங்களுக்கு ஏற்படும் குறைபாடு என்ன?''

தலைவன்: "குறைபாடு ஒன்றுமில்லை! நிலைமையை இப்பொழுது நான் நன்ருகப் புரிந்துகொண்டுள்ளேன். நான் திருமண ஏற்பாட்டுடன் விரைவில் வருகிறேன். தலைவியிடம் இந்தச் செய்தியைக் கூறு!''

தலைவன் திருமண ஏற்பாட்டுடன் திரும்பும் எண்ணத்தோடு ஏகுகிறான். தோழி தலைவனிடம் விடை பெற்றுக்கொண்டு வந்து தலைவியைக்கண்டு தனக்கும் தலைவனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலைப்பற்றிக் கூறுகிறாள். தலைவி அதுகேட்டு மகிழ்ச்சியுறுகிறாள்.

* * *

இது நற்றிணை—67 ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்ட சொல்லோவியமாகும். அந்தச் செய்யுள் நெய்தல் திணையைச் சார்ந்ததாகும். பகற்குறிவந்து நீங்கும் தலைமகனைத் தோழி வரைவு கடாவுவது என்பது செய்யுளின் கருத்துரையாகும். அந்தச்செய்யுளை இயற்றியவர் பேரி சாத்தனார் என்ற புலவராவார். இவர் வடவண்ணக்கன் பேரிசாத்தனெனவும், வடமவண்ணக்கன் பேரிசாத்தனெனவும் கூறப்படுவார். இவர் நாணயச் சோதகனாகப் (நோட்டக்காரன்) பணியாற்றி வந்திருக்கக்கூடும் என்று தெரியவருகிறது. இவர் பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறன், சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை, சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோரின் காலத்தவராவார். இவர் பாடிய பாடல்கள் நற்றிணையிலும், குறுந்தொகையிலும், அகத்திலும், புறத்திலுமாக 19 காணப்படுகின்றன.

சேய்விசுப்(பு) இவர்ந்த செழுங்கதிர் மண்டிலம்
மால்வரை மறையத் துறைபுலர் பின்றே
இற(வு) அருந்தி எழுந்த கருங்கால் வெண்குருகு
வெண்குவட்டு அருஞ்சிறைத் தாஅய்க் கரைய
கருங்கோட்டுப் புன்னை இறைகொண் டனவே
கணைக்கால் மாமலர் காப்ப மல்குகழித்
துணைச்சுறு வழங்கலும் வழங்கும் ஆயிடை
எல்லிமிழ் பனிக்கடல் மல்குசுடர்க் கொளீஇ
எமரும் வேட்டம் புக்கனர் அதனால்
தங்கின் எவனோ தெய்ய பொங்குபிசிர்
முழுவிசைப் புணரி எழுதரும்
உடைகடற் படப்பைஎம் உறைவின் ஊர்க்கே.

[நற்றிணை—67]

[பொழிப்புரை : நீண்ட தொலைவில் வானத்தில் ஏறிவந்த செழுவிய கதிர்களையுடைய ஞாயிற்று மண்டிலம் பெரிய மலைகளைத் தாண்டிச்சென்று மறைதலால் யாருமில்லாமல் நமது கடற்றுறை தனிமையாக இருக்கின்றது ; இருமீனைத் தின்றுவிட்டு எழும் கரிய கால்களையுடைய வெள்ளிய நாரைகள் வெண்மையான உப்புக்குவியல்களின் மேலாக அரிய இறக்கைகளை வீசிப்பறந்து சென்று, கரையிலுள்ள கரிய கிளைகளையுடைய புன்னைமரங்களிலே தங்குதல் கொண்டன ; திரண்ட தண்டினையுடைய

நெய்தல் மலர் மறையும்படியாக நீர் பெருகும் உப்பங்கழியின் கண்ணே துணையோடு சுறுமீன் இயங்குதலும் செய்யும்; அவ்விடத்தில் இரவில் ஒலிக்கின்ற குளிர்ச்சியையுடைய கடலில் மிக்க விளக்கங்களைக் கொண்டு எமது சுற்றத்தாரும் மீன்வேட்டையாடச்சென்றுவிட்டனர்; ஆதலால் பொங்குகின்ற பிசிரையும், முழவுபோல ஒலித்தலையுமுடைய அலையெழுந்து உடைந்து விழுகின்ற கடற்கரையிலுள்ள நெய்தல் நிலத்தில் நாங்கள் வசிக்கின்ற எம்மூரின்கண் இன்று இரவிலே தங்கிச் செல்லின் என்ன குறைபாடுண்டாகுமோ?

சேய்-தொலைவு; விசும்பு-வானம்; இவர்ந்த-ஏறிவந்த: இறவு-இறுமீன்; வெண்குருகு - வெள்ளிய நாரை; வெண்குவடு - வெள்ளிய உப்புக்குவியல் அல்லது வெள்ளிய மணல் குவியல்; கணை-திரண்ட; கழி-உப்பங்கழி; எல்-இரவு; வேட்டம்-மீன்வேட்டை.]

களவொழுக்கத்தில் இருந்துவரும் தலைவனைத் திருமணம் செய்துகொள்ளுமாறும், தலைவியோடு சேர்ந்து இல்லறத்தில் இனிதே இருக்குமாறும் தோழி மறைமுகமாக வற்புறுத்தும் பாங்கு இச்செய்யுளில் அழகாகக் காணப்படுகிறது. "எம்மூரில் இன்று இரவிலே தங்கிச்சென்றால் என்ன குறைபாடு உண்டாகுமோ?" என்று தலைவனைத் தோழி கேட்பதன் மூலம் அவன் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்பதை மறைமுகமாக வற்புறுத்துகிறாள் என்றாகிறது. எப்படியென்றால் தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொண்டாலல்லது தலைவியின் வீட்டில் இரவில் தலைவன் வெளிப்படையாகத் தங்குவது வழக்கத்திற்கு மாறுபட்ட செயலாகும். எனவேதான் தலைவியைத் திருமணம் செய்து கொள்வதிலே அவனுக்கு என்ன குறை என்று கேட்பதற்குப் பதிலாக, இரவிலே தலைவியின் வீட்டிலே அவன் தங்குவதிலே என்ன குறை என்று மறைமுகமாகத் தோழி கேட்கிறாள்.

தோழி சில உள்ளுறை உவமைகளைக்கூறி அவற்றின்மூலம் சில செய்திகளைத் தலைவனுக்குப் புலப்படுத்துகிறாள். சுறுமீனைத் தின்ற நாரைகள் புன்னைமரத்தில் போய்த்தங்குகின்றன என்ற உண்மையைச் சுட்டிக்காட்டி, அதன்மூலம் களவொழுக்க இன்பத்தை நுகர்ந்த தலைவன் தலைவியின் வீட்டில் போய்த் தங்கவேண்டும் என்ற செய்தியைப் புலப்படுத்துகிறாள். சுறுமீன்கள் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து இயங்குகின்றன என்பதைக் கூறுவதன்மூலம், தலைவன் தலைவியோடு சேர்ந்து வாழவேண்டும் என்பது புலப்படுத்தப்படுகிறது.

தலைவன் இரவிலே தன் ஊர்நோக்கித் திரும்பும்போது, ஆறலைகள்வர்களாலும், சுறுமீன்களாலும், மீன் வேட்டையாடச் சென்றிருக்கும் உற்றார் உறவினராலும் அவனுக்குத் துன்பம் ஏற்படக்கூடும் என்பதை எடுத்துக்கூறி, இரவிலே தலைவியின் வீட்டிலேயே தங்கும்படி அவனைத் தோழி வற்புறுத்தும் தன்மை நினைந்து மகிழ்வதற்குரியதாகும்.

செழுங்கதிர்களை வீசும் ஞாயிறு மலைகளுக்கப்பால் சென்று மறைதல், நாரைகள் இறுமீனைத் தின்றல், அவைகள் கரிய கால்களையும் வெண்மையான உடம்பையும் கொண்டிருத்தல், வெள்ளிய உப்பு குவியல்களாக இருத்தல், புன்னைமரம் கரிய கிளைகளையுடையதாக இருத்தல், நெய்தல் மலரின் தண்டு திரண்டிருத்தல், உப்பங்கழிகளில் சுறுமீன்கள் உலாவுதல், அலைகள் எழுந்து உடைந்துவிழுதல், மீன்வேட்டையாடச் செல்லும் வலைஞர்கள் இரவுவேளையில் கையில் தீப்பந்தங்கள் ஏந்திச்செல்லுதல் போன்ற காட்சிகள் இனிமையாக நினைவுபடுத்தப்படுகின்றன. அலையின் ஓசைக்கு முழவின் ஓசை உவமையாக்கப்பட்டிருக்கிறது.

—

(40)

கைலை மலையில் ஒரு சமயம் சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் திருமணம் நடந்தது. முழுமுதற் கடவுளுக்குத் திருமணமென்றதும், தேவர்களெல்லாம் அங்கு கூடியிருந்தனர். சப்த இருடிகள், வேதசாத்திரங்களை கரைத்துக்குடித்த முனிவர்கள் அங்குகூட, திருமணம் நடைபெறும இடத்தில் யாகங்கள் நடத்தினார்கள். கல்யாண மேடைக்குமுன் பிரமதேவர் அமர்ந்து, ஓமகுண்டத்தை வளர்த்துக்கொண்டிருந்தார். வேதங்கள் ஆகமங்களுக்கெல்லாம் காரணமான பிரமதேவரே அங்கு இருக்கும்பொழுது, அவரை விடச் சிறந்த புரோகிதர் வேறுயார் இருக்கப் போகிறார்கள்! பிரமதேவர் முகூர்த்த நேரத்துக்கு முன்கூட்டியே, ஓமத்தை வளர்த்து, மந்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். திருமணச்சடங்குகளை ஆரம்பித்தார். முதலில் சிவபெருமான்—மாப்பிள்ளைவந்து கல்யாண மேடையில் அமர்ந்தார். அவருடைய மேனி நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பழைய பாம்புகளைத் தூக்கிப்போட்டு, புதிய பாம்புகளை அவர் அணிந்திருந்தார். மணமகனுக்கான சடங்குகளை பிரமதேவர் செய்தார். அதன்பின் மணப்பெண்ணை பார்வதி தேவியார் அழைத்து வரப்பட்டார். மிகச்சிரமப்பட்டு, நாணிக்கோணி பார்வதி வந்து மேடையில் உட்கார்ந்தாள்.

பிரமதேவர் ஆவிலையால் நெய்யை எடுத்து, ஓமகுண்டத்தில் போட்டு எரியவிட்டு மந்திரங்களைச்சொன்னார். என்றுமில்லாதவாறு, அவருடைய குரல் கணீரென்று வேதவொலி நிறைந்து வந்தது. முழுமுதற் கடவுளின் திருமணத்தை நடத்தி வைக்கிறோம் என்ற ஆர்வத்தில், பிரமதேவர் மிகத்திறமையுடன் சடங்குகளை வேதமந்திரங்களுடன் செய்தார்.

தீயைப்பார்த்து, நெய்யை ஊற்றி ஊற்றி, பிரமதேவர் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். சுற்றிலும் உட்கார்ந்திருப்பவர்களையோ, மணமேடையில் இருப்பவர்களையோ அவர் பார்க்கவில்லை. ஓமகுண்டத்தைப் பார்த்துக் குனிந்ததலை நிமிராமல் அவர் மந்திரங்களை முணுமுணுத்துக்கொண்டிருந்தார். அவருடைய கண்கள் யாகத்தீயைப் பார்த்துக்கொண்டிருந்தன. கருத்து வேதத்தில் படிந்திருந்தது. உதடுகள் மந்திரங்களை உச்சரித்துக்கொண்டிருந்தன.

பாழும் கண்கள்! அவை தீயைவிட்டு நகர்ந்து சுற்றிலும் ஒருதடவை பார்த்தன. எதிரில் சிவபெருமான் உட்கார்ந்திருந்தார். முழுஉருவம் தெரியவில்லை. மேடையில் அவர் அமர்ந்திருந்ததால் கால்கள் மட்டும் தெரிந்தன. அவருக்குப் பக்கத்தில் இரு பாதங்கள்மட்டும் தெரிந்தன. அழகிய மென்மையான பாதங்கள் செந்தாமரை மலர் போன்ற சிவந்த அடிகள். விரல்களின் அழகு சொல்லுந்தரமன்று! ஆகா! எவ்வளவு அழகான விரல்கள்! என்று பிரமதேவர் அதிசயித்தார், திரும்பத் திரும்பக்கடைக்கண்ணால் அந்தக் கால்விரல்களைக்கண்டு மகிழ்ந்தார்.

யாகப்புரோகிதர் மணமகளின் கால்விரல்களைக்கண்டு பரவசமடைந்தார். இவ்வளவு அழகிய விரல்களை அவர் இதுவரைக்கண்டதில்லை, தம்முடைய படைப்பில் எண்ணியதுமில்லை. உதடுகள் மட்டும் மந்திரங்களை முணுமுணுத்துக்கொண்டிருந்தன, கை தானாக

நெய்யை வார்த்தபடி இருந்தது; ஆனால் கருத்திலோ வேதம் மறைந்தது, மங்கையொருத்தியின் மலரடிகள் நின்றன; அசைந்தன நர்த்தனமாடின!

சிவந்த விரல்கள் அவர் சிந்தையைக் கலக்கின.

மலரடி அவர் மனதில் புயலைக்கிளப்பியது.

...கல்யாணத் திருக்கூடம். சுற்றிலும் கூட்டம், தேவாதிமுனிவர்கள் திருமால் போன்ற பெரியவர்கள்! மணமகனோ சிவபெருமான்! இருந்தாலும் மணமகளின் கால் விரல்களைக்கண்டு யாகப்புரோகிதரான பிரமா அடைந்த காமப்பரவசம் அடங்கவில்லை.

கால் விரல்களே இவ்வளவு அழகாய், கருத்தைக் கவர்வதாய் இருந்தால், மணமகளின் முழு அழகும் எப்படியிருக்கும். பிரமாவின் மனதில் கேள்வி உண்டானது. பெண்ணின் அழகை, அங்க அமைப்புகளை பாதாதிகேசம் என்று, அதாவது பாதம் தொடங்கி தலைமயிர்வரை என்று வருணிப்பார்கள். பிரமா மணப்பெண்ணின் பாத அழகைப் பருகிவிட்டார். இனி பெண்ணின முழு அழகையும் காணவேண்டும் என்ற ஆவல் அவர் உள்ளத்தில் மூண்டது.

நேரிடையாகப் பார்த்தால், கல்யாண மண்டபத்தில் கூடியிருக்கும் மற்றவர்கள் அதைக் கவனித்து விடலாம். அதிலும் சாதாரணமாகப்பார்த்துவிட்டு, மறுபடியும் ஓமகுண்டத்தைப்பார்த்து 'சடங்குகளைச் செய்துகொண்டிருந்தால் யாரும் சந்தேகிக்க மாட்டார்கள்! ஆனால் பார்த்தகண் பார்த்தபடி, பார்வதியின் அழகை பருகியபடி இருந்துவிட்டால் ஆபத்து அதிகமாகும், "அபவாதம் பிறக்கும், "வேத முதல்வர், சாத்திர சம்பிரதாயங்கள் கடமைகள் ஒழுக்கங்களை உலகுக்குத் தந்தவர், அந்த உத்தமர் கல்யாணப் புரோகிதராய் உட்கார்ந்துகொண்டு மணப்பெண்ணை வெறித்துப்பார்த்தபடி இருந்தார். பார்வையில் காமவெறி இருந்தது என்று," மற்றவர்கள் குற்றங்கற்பிப்பார்கள்.

தடைகள் பலவிருந்தாலும், மணப்பெண்ணை ஒரு தடவையேனும் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசையை பிரமாவால் தடுக்கமுடியவில்லை. பாண்டங்களை அமைத்திடும் குயவனைப்போல, பல உயிர்களுக்குப் பிண்டந் தந்து, அங்கங்களை அளந்து அமைத்து, உயிர் தரும் பிரமதேவனுக்கு இந்தப்பெண் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறாள், என்ற தொழில்பற்றிய ஆராய்ச்சியுடன், கால்விரல்களே இவ்வளவு அழகுடன் இருந்தால் கால்தொட்டு தலைவரை மற்ற அமைப்புகள் எவ்வளவு அழகுடன் இருக்கும் என்ற காமக் கலையின் கேள்வியும் அவர் மனதைத் தொளைத்தபடி இருந்தன.

மணப்பெண்ணை ஒரு தடவை பார்த்துவிடுவது—கண்ணால் என்று பிரமா தீர்மானித்தார். அதே சமயம் தாம் பார்ப்பதை மற்றவர்கள் கவனிக்காதிருக்க ஒரு வழியும் செய்தார். வளர்த்துக்கொண்டிருந்த ஓமகுண்டத்தில் திடீரென்று அதிகமான நெய்யைக்கொட்டினார். சிறு அளவில் எரிந்துகொண்டிருந்த கனல் அவிந்து; புகை எழுந்தது; இன்னும் அதிக நெய்வார்க்க, புகை எங்கும் பரவியது. கூடியிருந்தவர்களெல்லாம் புகையில்சிக்கி, கண்களைக் கசக்கிக்கொண்டார்கள். அந்தச் சமயத்தில் பிரமதேவர், மணமேடையில் அமர்ந்திருக்கும் உமாபிராட்டியாரைப் பார்த்துவிட்டார்.

உமாதேவியின் அழகை பிரமதேவர் முதல் தடவையாகக் கண்டார், கண் குளிர காமம் கிளர.

புகை அடங்கியது. தீ மறுபடியும் வளர்ந்து யாகச்சடங்குகள் தொடர்ந்தன. ஆனால் பிரமதேவர் தன்னிலையில் இல்லை. வேதங்கள், சாத்திரங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், எல்லாவற்றையும் உண்டாக்கித்தந்தவர் என்ற காரணத்திற்காக அவரை கல்யாணப் புரோகிதராக வைத்தால், செல்லவேண்டிய மந்திரங்கள் சில விடுபட்டன, சடங்குகள் தவறின, அவருடைய குரல் குளறியது. பிரமாவின் நிலை மற்றவர்களுக்குப் புரியவில்லை. வேதமுதல்வரால் வேதங்களைச் சரியாகச் சொல்ல முடியவில்லையென்றால், வேறு யாரைத்தான் பிடிக்க முடியும்.

பிரமா பட்டபாடு அவருக்கல்லவா தெரியும்! உமாதேவியாரின் அழகிய உருவத்தை பார்த்ததும் அப்படியே மயங்கிவிட்டார். ஓமகுண்டத்தைப் பார்த்த தலை நிமிராமல் இருந்தாலும், அவருடைய கண்கள் மணமகள் பக்கம் அடிக்கடி கவனித்தபடி இருந்தது. எதிரில் தீ எரிந்தது, மனதில் காமத்தீ மூண்டது. அதில் வெந்து உருகியபடி அவர் இருந்தார். பெண்களென்றால் தேவர்களின் கற்பனை அளவு 'கடந்துபோகும். மணப்பெண்ணை ஒரு தடவை பார்த்ததும், பிரமதேவரின் மனம் கற்பனை செய்ய ஆரம்பித்தது. அந்தப் பெண் தனக்குக்கிடைத்தால் எவ்வாறு உல்

லாசமாக இருக்கலாம், ஆட்டங்கள், பாட்டங்கள், மலரணைகள், மஞ்சங்கள், பஞ்சபாணனுடன் விதவிதமான போராட்டங்கள், காமன் கண்டு அதிசயிக்கும் லீலைகள் எவ்வளவு புரியலாம் என்பதில் பிரமாவின் எண்ணம் சென்றது.

ஓமகுண்டத்தின் முன் அமர்ந்து உளறிக்கொண்டிருந்த பிரமாவைப்பார்த்து, மற்றவர்கள் சிரிக்கத்தொடங்கினர். சிவபெருமானுக்குக் கோபம் வந்தது. யாகப்புரோகிதர் சொல்லும் மந்திரங்களில் அடிக்கடி பார்வதியின் பெயர் வந்தது. மணமகனின் பெயரை ஒரு தடவை சொன்னால், மணமகளின் பெயரை மூன்று நான்கு தடவைகள் இழுத்து, சுவைத்து, ரசனையுடன் புரோகிதர் சொன்னார். மந்திரம் என்றால் பெருமூச்சு, கனிவு, குழைவு எல்லாம் எதற்கு? மணக்கோலத்திலிருந்த சிவபெருமான் கோபத்துடன் எழுந்தார். பிரமதேவருக்குக் கடுமையான சாபங்கொடுக்கப் போனார்.

பிரமதேவர்காலில் விழுந்தார். மற்றவர்களுக்கு நடந்தது என்னவென்று தெரியாது. சடங்குகள் சரியாக நடைபெறவில்லை என்பது மட்டும்தான் தெரியும். வேத மந்திரங்களை மறந்துவிட்டார் அந்த ஆதிநாயகன் என்று அவர்கள் பரிதாபப்பட்டு, சிவபெருமானைத் தடுத்தார்கள். மணவீட்டில் தகராறுகள் வேண்டாமென்று சிவபெருமான்விடுத்தார். கல்யாணம் முடிந்தது.

பிரமாவின் மனதில் மூண்ட காமம் அழகிய பெண்ணைப் பார்த்ததால் ஏற்பட்ட கிளர்ச்சி அடங்குவதாயில்லை. கற்பனையில், பிரமா காமலீலைகள் நடத்தினார். அதன் பலனாகக் குழந்தையே பிறந்துவிட்டது. ஏனென்றால், பிரமா சிருட்டிகர்த்தாவாதலால் அவர் நினைத்தாலே பிள்ளைகள் பிறந்து விடக்கூடும். ஆதலால் சிவன் திருமணத்தில் அவர்பட்ட காம வேதனை, உள்ளத்தில் உழன்று, குழந்தைகள் பிறந்தன. குழந்தைகள் ஒன்று இரண்டல்ல, நூறு குழந்தைகள் பிறந்தனவாம், பிரமா மானசீகமாக நடத்திய காமவிளையாட்டில்! நூறு குழந்தைகளைத் தருமளவு பிரமதேவன் காமம் வளர்ந்திருந்தது.

உமாதேவியாரைக் கண்டு பிரமா காமயிச்சை கொண்டது சிவபெருமானுக்குத் தெரிந்துவிட்டது. அவர் முழுமுதற் கடவுளல்லவா? சிவபெருமானின் கோபம் மிகவும் ஆபத்தானதாகையால், பிரமா சிவனுக்குப் பிரியமான வகையில் பூசைகள்செய்து, அந்தக் கோபத்தைத் தணித்தாராம்.

யாகஞ்செய்யப் போகும் இடங்களில் பெண்களைக் கண்டு காமப்பரவசமடைந்து, வந்த காரியத்தையும் மறந்துவிடுவது பிரமாவின் இயல்பு. சிவபெருமான் கல்யாணத்தில் நிகழ்ந்ததைப்போலவே, மற்றொரு சமயமும் நடைபெற்றது. தேவர்கள் கூடி, அசுரர்களை வெல்லும் பலத்தைப்பெறவேண்டி, அசுவமேத யாகம் ஒன்று நடத்தினார்கள். அதை நடத்தி வைக்க, பிரமதேவர் அழைக்கப்பட்டிருந்தார். அசுவமேதயாகத்தின் முடிவில், பெண்கள் வந்து யாகக்குதிரையை அடித்துக்கொன்று, பின் இரவு பூராவும் இறந்த குதிரையுடன் அணைந்து இருக்க வேண்டும். அதனால் யாகத்திற்கு தேவ மாதர்களும் வந்திருந்தனர். யாகம் நடத்திக்கொண்டிருந்த பிரமதேவர் முதலில் அந்தப் பெண்கள் வந்திருந்ததைக் கவனிக்கவில்லை, யாகத்தின் மத்தியில் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு திரும்பியவர் யாகசாலையின் ஒரு மூலையில் தேவபத்தினி ஒருத்தி நிற்பதைப்பார்த்தார். அவள் நடப்பது நடனமாடிச் செல்வதுபோலிருந்தது. அவள் மற்றவர்களைக் கூப்பிடுவது குயில் கூவுவது போலிருந்தது, பிரமதேவருக்கு! அவ்வளவுதான், ஓமகுண்டத்திலிருந்த கவனம் குறைந்தது, பிரமதேவரின் பார்வை அந்தப் பாவையின்பின் நடமாடியது.

இன்னொரு பெண் வந்தாள். அவள் முதலில் பார்த்த பெண்ணைத் தோற்கடிப்பவளாக இருந்தாள். பிரமதேவரின் கண்கள் இரண்டாவது பெண்ணைக் கண்காணித்தது. மூன்றாவது தெய்வமாது வந்தாள். பல பெண்கள் வந்திருந்தனர். ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்து, பிரமதேவர் பரவசமடைந்தார். அவர்களனைவரும் தெய்வலோக மாதர்கள், காமலோகத்துக்கென்று பொறுக்கப்பட்ட கன்னிகள்' கையொன்று செய்ய, வாயொன்று சொல்ல, கண்ணொன்று நாட, மனமொன்றை நினைத்துவாட, பிரமதேவர் யாகக் குண்டத்தின்முன் உட்கார்ந்திருந்தார். யாகம் முடிந்ததும் நாடியிருந்தால், அந்த தேவமாதர் தடையொன்றும் சொல்லியிருக்க மாட்டார், கிடைக்க முடியாத பெரும்பேறென நினைத்து பிரமாவுக்குப் பணிந்திருப்பார்கள். யாகசாலையில் தேவாதிதேவர்களும் முனிவர்களும் கூடியிருக்கும்பொழுது என்ன செய்ய முடியும்? பிரமாவின் பார்வையும் தடுமாற்றமும் தெய்வ மாதர்களுக்குமட்டும் புரிந்தது. நாணத்துடன், அவர்களும் பதிலுக்குப் பார்த்துவிட்டு ஒதுங்கிச் சென்றுவிட்டார்கள் ஆனால் பிரமாவின் நிலை மற்றவர்களுக்குப் புரியவில்லை. யாக முறைகளில் தடுமாற்றமும்,

1091

திராவிடத்தின் வரலாற்றிலே ஓர் திருப்பு முனை!

திராவிடம் வளம்பெற—திராவிடர் நலம்பெற—திட்டங்கள் வகுக்க,

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு!

மே 17, 18, 19, 20-இல்

திருச்சியில்

நடைபெறும்

அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம்பற்றி விளக்கந்தரும்

கவர்ச்சிமிக்க கண்காட்சிகள்!

எழுச்சிதரும் இன்னிசை அரங்குகள்!

உணர்ச்சி ஊட்டும் நாடக நிகழ்ச்சிகள்!

புரட்சி பயக்கும் திட்டங்கள்!

சிறப்புமிக்க சொற்பொழிவுகள்!

ஆகிய எல்லாம் சிந்தனைக்கு அரிய விருந்தூட்டும்!

அனைவரும் திரண்டு வாரீர்!

—வரவேற்புக்குழு.

திராவிடத்தின் வரலாற்றிலே ஓர் திருப்பு முனை!

திராவிடம் வளம்பெற—திராவிடர் நலம்பெற—திட்டங்கள் வகுக்க,

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு!

மே 17, 18, 19, 20-இல்

திருச்சியில்

நடைபெறும்

அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம்பற்றி விளக்கந்தரும்

கவர்ச்சிமிக்க கண்காட்சிகள்!

எழுச்சிதரும் இன்னிசை அரங்குகள்!

உணர்ச்சி ஊட்டும் நாடக நிகழ்ச்சிகள்!

புரட்சி பயக்கும் திட்டங்கள்!

சிறப்புமிக்க சொற்பொழிவுகள்!

ஆகிய எல்லாம் சிந்தனைக்கு அரிய விருந்தூட்டும்!

அனைவரும் திரண்டு வாரீர்!

—வரவேற்புக்குழு.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி!

டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார். (மலாயா)

எங்களிடம்!

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் அறிவூட்டும் நாவல்களும் துப்பறியும் கதைகளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், (சினிமா) கதை வசனபாட்டு புத்தகங்களும், கலர் படங்களும், தாயகத்திலிருந்து வரும் வார, மாத பத்திரிகைகளும், ஸ்டேசனரி சாமான்களும், காலண்டர் மற்றும் ஆங்கில காமிக்ஸ், மேக்கிசன் & நாவல்களும் மலாய் நாவல்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

குறிப்பு : வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

வெளியூர் ஆர்டர்களை தாமதமின்றி கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

AVVAI BOOK STORE

142, JALAN IDRIS, KAMPAR. Tel. No. 22. PERAK, MALAYA.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

திருமணி சீயக்காய் தூள் REGD No. 13817. வெண்சங்கு

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)